


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 129 குரோதி வருடம், மார்கழி மாதம் 04ஆம் திகதி வியாழக்கிழமை (19.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 17, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




# மக்களுக்கு நிவாரணம்!

## ஜனாதிபதி அநுரகுமார நேற்று பாராளுமன்றில் அறிவிப்பு



- வாகனச் சந்தையை கட்டம் கட்டமாக திறந்து விடுவது குறித்து கவனம்
- பராட்டே சட்டம் சலுகை நீடிப்பு
- கஷ்டநிலையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு 6,000 ரூபா கொடுப்பனவு

» 04 பக்கம்

# இந்தியாவுடன் பேசியது என்ன?

## விளக்கம் கோரும் எதிர்க்கட்சி

''ரணில் ராஜபக்ஷ என்று கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவை குறிப்பிட்டோம். தற்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுடன் மிக நெருக்கமாக செயற்பட்டு ரணிலின் கொள்கையை முழுமையாக அமுல்படுத்துவதால் ஜனாதிபதியை அநுர விக்கிரமசிங்க என்றே அழைக்க வேண்டியுள்ளது.

» 02 பக்கம்






எட்கா ஒப்பந்தம் சரியில்லையென்று முன்னர் ஜனாதிபதி அநுர ஒருக்கா சொன்னார்... இப்போ அது நல்லதென்று கவர்னர் ஐயா சொல்லுறார்.. என்ன நடக்குது?



# எட்கா ஒப்பந்தம் தொடர்பில் நிலைப்பாட்டை வெளியிடுக!

## ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. அரசிடம் வலியுறுத்து

''இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (எட்கா) தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்'' என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை(18) இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான...

» 02 பக்கம்

# எட்கா ஒப்பந்தத்தில் பாதிப்பில்லை!

## மத்திய வங்கியின் ஆளுநர் கருத்து

''இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தத்தை செய்வது பாதகமானது அல்ல என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். சிறந்த பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கின்ற இந்தியாவுடன் எட்கா போன்ற ஒரு ஒப்பந்தத்தை செய்வது இலங்கைக்கு...

» 02 பக்கம்



# அர்ச்சுனாவின் உரை ஹன்சாட்டிலிருந்து நீக்கம்



பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, யாழ். வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் நேற்று (18) சபையில் விசேட கூற்றை முன்வைத்து சபைக்கு முரணான வகையிலும் நிலையியற் கட்டளைச் சட்டத்துக்கு முரணாகவும் கருத்துகளை முன்வைத்ததால் அவரின் உரை ஹன்சாட்டிலிருந்து சபாநாயகரால் நீக்கப்பட்டுள்ளது.

சபை அமர்வுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற வாய்மூல விடைக்கான...

» 02 பக்கம்



# மின்சக்தி– எரிசக்தியுடன் விளையாட்டு வேண்டாம்

## இந்தியாவுடனான ஒப்பந்தங்களுக்கு விமல் எதிர்ப்பு

» 02 பக்கம்

# கோப் குழுவின் தலைமைத்துவம் ஆளுங்கட்சிக்கு

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைமைப் பதவியை சில காரணங்களுக்காக ஆளுங்கட்சி வசம் வைத்திருக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று...

» 02 பக்கம்



# கல்விச் சான்றிதழ்களை வெளியிட்டார் சஜித்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது முன்பள்ளி அனுமதிச் சான்றிதழ் முதல் அவரது சகல கல்விச் சான்றிதழ்கள் மற்றும் கல்வி கற்ற பாடசாலைகள், கல்லூரிகளின் விபரங்களையும் நேற்று (18) சபைக்கு சமர்ப்பித்தார்.

தனது பிறப்பு தொடர்பில் கேள்விகள் எழும் என்பதற்காக தனது பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றையும் முன்வைப்பதாக தெரிவித்து அதனையும் சபைக்கு ஒப்படைத்தார்.

அத்துடன் தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் போலியானவை என்பதை யாராவது நிரூபித்தால் அரசியலிலிருந்து விலகுவதற்கு தான் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை(18)...

» 02 பக்கம்




யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்துக்கு செல்வதற்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் விவாத நேரத்துக்கு பேசுவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால் ஆளுங்கட்சியின் சார்பில் நேரமொன்றை ஒதுக்க ஆராயப்படுகிறதாம்.

எவ்வாறாயினும், அர்ச்சுனாவுக்கு ஆளுங்கட்சி நேரத்தை ஒதுக்கவேண்டிய தேவையில்லையென ஆளுங்கட்சிக்குள்ளும் எதிர்ப்புகள் எழுந்துள்ளனவாம்.

# பொருளாதார ஒத்துழைப்புக்காக சீனாவுக்கு நன்றி கூறிய அநுர



கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கைக்கு கடன் பெற்றுக்கொடுத்தமைக்காக சீன அரசாங்கத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நன்றி தெரிவித்தார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனை சம்மேளன (CPPCC) தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் (Qin Boyong) ஆகியோருக்கு...

» 02 பக்கம்

# புலமைப்பரீட்சை வழக்கின் தீர்ப்பு டிசம்பர் 31இல்

கா.யோசியா

நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையில், முதலாவது வினாத்தாளில் மூன்று வினாக்கள் கசிந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில்...

» 02 பக்கம்



# க.பொ.த (சா/த)பரீட்சை மார்ச் 17-26 இல்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நேற்று (18) அறிவித்தது.

அதற்கமைய, சாதாரண தரப் பரீட்சை 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதியிலிந்து 26 ஆம் திகதி வரையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்வதற்காக, 1911, 0112784208, 0112784537, 0112786616 ஆகிய நேரடி அழைப்பு இலக்கங்களுக்கும் 0112784422 தொலைநகல் இலக்கத்துக்கும் 0112786200,0112784201, 0112785202 ஆகிய பொது தொலைபேசி இலக்கங்களுக்கும் அழைக்க முடியும். அவ்வாறு இல்லாவிட்டால் gceolexamsl@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ள முடியுமென பரீட்சைகள் திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# குற்றச்சாட்டை நிரூபித்தால் எம்.பி. பதவியை துறப்பேன்

## நாமல் சபையில் சவால்



''எனது தந்தை ஜனாதிபதியாக இருந்தபோது சட்டக் கல்லூரி இறுதியாண்டு பரீட்சையை குளிரூட்டப்பட்ட பிரத்தியேக அறையிலிருந்து எழுதியதாக முன்வைக்கும் குற்றச்சாட்டை சட்டத்தின் முன் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபித்தால் பாராளுமன்ற உறுப்புரிமையை துறப்பேன்'' என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (18) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''செவ்வாய்க்கிழமை(17) பாராளுமன்றத்தில் நான் சபையில் இல்லாத நேரத்தில் அமைச்சர் ஒருவர் என்னை தொடர்புபடுத்தி பாரதூரமான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். சட்டக்கல்லூரி மீதும் நாட்டின் சட்டக் கட்டமைப்பு மீதும் அவர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். நான் உயிர் அச்சுறுத்தல் விடுத்ததால் பேராசிரியர் ஒருவர் நாட்டை விட்டு வெளியேறியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியே தற்போது ஆட்சியில் இருக்கிறது. ஆகவே, இதுதொடர்பில் முறையாக விசாரணை செய்யுங்கள்.

ஆகவே அந்த நபரை நாட்டுக்கு அழைத்து வந்து முறையாக விசாரணை செய்யுங்கள். நான் சட்டக்கல்லூரி பரீட்சை வினாத்தாளை தயாரிக்கவில்லை. அதேபோல் எனது தந்தை ஜனாதிபதியாக இருந்ததால் அதிக புள்ளிகள் எனக்கு வழங்கப்படவுமில்லை. பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து கொண்டு பொய்யுரைக்க வேண்டாம். ஆகவே என்னை தொடர்புபடுத்தி முன்வைத்த பொய்யான விடயங்களை ஹன்சாட் பதிவிலிருந்து நீக்க வேண்டுமென சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

இதன்போது எழுந்த அமைச்சர் வசந்த சமரசிங்க,

''நாமல் ராஜபக்ஷ சட்டப் பரீட்சை எழுதிய விதம் பற்றி நான் தான் சபையில் கருத்து முன்வைத்தேன். ஆகவே எனது பெயரைக் குறிப்பிட்டே அவர் உரையாற்றலாம். நாமல் ராஜபக்ஷ சட்டப்பரீட்சை எழுதிய முறைமை தொடர்பில் குற்றச்சாட்டை முன்வைத்துள்ள நபர் காணொளி பதிவை அனுப்பி வைத்துள்ளார். வெகுவிரைவில் அவர் நாட்டுக்கு வருவார். பிரத்தியேக அறையில் பரீட்சை எழுதினார் என்பதை பொறுப்புடனேயே இந்த சபையில் கூறினேன். எவ்வாறு இவருக்கு மாத்திரம் தனிச் சலுகை வழங்க முடியும்? நாமல் ராஜபக்ஷவுடன் இறுதியாண்டு பரீட்சை எழுதிய துஷார என்ற நபர் தான் முறைப்பாடளித்துள்ளார். அவர் செவ்வாய்க்கிழமையும் என்னுடன் பேசினார். வெகுவிரைவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும். அப்போது பிரத்தியேக அறையில் பரீட்சைக்கு தோற்றியதை பற்றி குறிப்பிட முடியும் என்றார். இதனைத் தொடர்ந்து எழுந்த நாமல் ராஜபக்ஷ எம்.பி, ''குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து நான் தனியாகப் பரீட்சை எழுதியதாக சட்டத்தின் முன் நிரூபித்தால் பாராளுமன்ற உறுப்புரிமை பதவியை துறப்பேன். இல்லையேல், நீங்கள் அமைச்சுப் பதவியை துறக்க வேண்டும்'' என சவால் விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த அமைச்சர் வசந்த சமரசிங்க,

''இவர் தனி அறையில் தனியாக பரீட்சை எழுதவில்லை என்றால் இவருக்கு சார்பாக பரீட்சை எழுதிய நபரும் இருந்திருக்கலாம். ஏனெனில் இவர் வணிக சட்டத்தில் 99 புள்ளிகளை பெற்றுள்ளார். ஆகவே இவரின் கல்வித் தகைமை பரிசீலனை செய்யப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டதைத் தொடர்ந்து நாமல் ராஜபக்ஷவுக்கும் அரச தரப்பினருக்குமிடையில் சிறிது நேரம் கடும் வாதப் பிரதிவாதம் ஏற்பட்டது.

## மின்சக்தி...

''ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயத்தின்போது இந்தியாவிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யவும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் எரிபொருள் விநியோக குழாயை நிர்மாணிப்பதற்குமான திட்டத்துக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இவை அபாயகரமான திட்டங்கள். இந்த திட்டங்கள் அமுலாக்கப்பட்டால் நாட்டின் அத்தியாவசிய தேவைகளுக்கும் இந்தியாவை சார்ந்திருக்க நேரிடும். இந்தியாவின் ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களே இன்று இவ்வாறான வேலைத்திட்டங்களை அமுல்படுத்த முயற்சிப்பது ஆச்சரியமாக இருக்கிறது. மின்சக்தியையும் எரிசக்தியையும் இவ்வாறு விளையாட்டாக கருதுவது ஆபத்தை ஏற்படுத்தும்'' என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது வெளியிடப்பட்ட இருதரப்பு கூட்டறிக்கை குறித்து விளக்கமளிக்கும் வகையில் கொழும்பில் நேற்று புதன்கிழமை(18) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், ''இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்றதை நாங்கள் நேர்மறையாகவே பார்க்கிறோம். இருந்தபோதும் ஜனாதிபதியின் இந்திய விஜயம் மற்றும் இரு நாட்டு தலைவர்களாலும் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையை தொடர்ந்து மேலும் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம்பெற ஆரம்பித்துள்ளன. இந்தக் கூட்டறிக்கையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அதிதிறன் கொண்ட மின் கட்டமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, குழாய் வழியாக மின் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வோம் என்பதே பொருளாகும். இதற்கு அரசாங்கத் தரப்பில் எம்மிடம் அதிக மின் உற்பத்தி இருப்பதாகவும் அந்த மேலதிக உற்பத்தியை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு இது சிறந்த வாய்ப்பாக இருக்குமென்று குறிப்பிட்டுள்ளது. மின் உற்பத்தி இன்று மேலதிகமான உற்பத்தியாக இருந்தாலும் எதிர்காலத்தில் நாடு அபிவிருத்தியடைந்து மின் நுகர்வு அதிகரிக்கும்போது இந்த மேலதிக உற்பத்தி இவ்வாறே இருக்குமென்று யாராலும் எதிர்வுகூற முடியாது.

மற்றையது, அவசர நிலைமைகளின்போது இந்தியாவிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய முடியுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவசர நிலைமைகளின்போது பங்களாதேஷ் அதானி நிறுவனத்திடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்தது. அதன் பின்னர் கட்டணத்தை செலுத்த முடியாமல் முழு பங்களாதேஷும் இருளில் மூழ்கியது. எனவே, இந்த விவகாரத்தில் மின்சக்தியுடன் விளையாடுகிறார்கள். இது மிகவும் அபாயகரமான செயற்பாடு என்று நாங்கள் நம்புகிறோம். மேலதிக மின் உற்பத்தி இருக்கிறது. மேலதிக உற்பத்தியை விற்பனை செய்வோம், அதனூடாக டொலர்களை நாட்டுக்கு வரவழைப்போம் என்று அரசாங்கம் எத்தனை தேவதை கதைக் கூறினாலும் எதிர்காலத்தில் முதலீடுகள் இல்லாமல் போகும்போதும் புதிய ஹோட்டல்கள், தொழிற்சாலைகள், தொழில் வலயங்கள் உருவாகும்போது அவற்றுக்குத் தேவையான மின்வலுவை பெற்றுக்கொடுக்க முடியாமல் போகும் போது இறுதியில் இந்தியாவிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய நேரிடும்.

இந்தியாவில் மின்சாரத்தை கொள்வனவு செய்து, ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மின் கட்டணத்தை செலுத்த முடியாமல் போனால் முழு நாடும் இருளில் மூழ்கும் நிலை உருவாகும். எனவே, இதுவொரு எச்சரிக்கை நிறைந்தவொரு திட்டமாகும். எல்லா பாகங்களிலும் இலங்கையை அவர்களுடன் இணைப்பொன்றை உருவாக்கிக்கொள்வதே இந்தியாவின் தேவையாகும். அரசியல் ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் மின்சக்தி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இலங்கையை அவர்களின் இடைத்தொடர்பு என்பதில் நடிக்கும் கதாபாத்திரமாக்கி கொள்ளவேண்டும் என்பதே இந்தியாவின் அவசியமாகும்.

மேலும் அந்த கூட்டறிக்கையில், இந்தியா, இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பு மலிவு மற்றும் நம்பகமாக எரிசக்தியை வழங்குவதற்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு குழாய்த் திட்டத்தை அமுல்படுத்தப்போவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மின்சாரம் தொடர்பில் தற்காலிக கருத்துகளை முன்வைத்தாலும் எமது நாடு எரிபொருள் வளம் கொண்ட நாடு இல்லை. எமக்கு தேவையான எரிபொருளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தே பயன்படுத்துகிறோம். இந்தியாவையும் இலங்கையையும் இணைத்து எரிபொருள் குழாயொன்றை இணைத்தால், இறுதியில் எரிபொருளுக்காக இந்தியாவை எதிர்பார்த்து இருக்கவேண்டி ஏற்படும். இந்தியா கூறும் விலையின் அடிப்படையில் எரிபொருளை கொள்வனவு செய்ய வேண்டி ஏற்படும். குறைந்தது அதுதொடர்பில் இலங்கை சார்பில் நிலைப்பாட்டைக் கூட வெளியிட முடியாத நிலை ஏற்படும். இந்த குழாய் இரு பக்கமும் இயங்காது. இந்தியாவிலிருந்து இலங்கையை நோக்கி மாத்திரமே இயங்கும். இந்தியா ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருளை கொள்வனவு செய்கிறது. அவற்றை சுத்திகரித்து ஐ.ஓ.சி.நிறுவனத்தினூடாக விற்பனை செய்யப்படுகிறது.

இலங்கை, சிங்கப்பூர் சந்தைக்கு ஏற்ப விலையை நிர்ணயித்தாலும், ஐ.ஓ.சி. மிக குறைந்த விலையில் ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்கிறது. அவ்வாறென்றால் அவர்கள் அதிக இலாபத்தையும் அடைகிறார்கள். ரஷ்யாவிடமிருந்து பெறும் எரிபொருளை சுத்திகரித்து இந்தியா அமெரிக்காவுக்குக் கூட விற்பனை செய்கிறது. அதன் காரணமாக இந்த எரிபொருள் குழாய் எமது எரிசக்தி துறையை பாதுகாக்காது. மாறாக எரிசக்தியை தோற்கடிக்கும் எரிபொருள் குழாயாக அமையும். இது அபாயகரமானதாகும்.

இந்தியாவுக்கு பிரம்மபுத்ரா என்ற திட்டமொன்று இருக்கிறது. வலயத்திலுள்ள ஏனைய நாடுகளை அவர்களுடன் இணைத்துக்கொள்வதே அவர்களின் திட்டம். அநேகமாக இந்தியாவே அதிலிருந்து தப்பித்திருந்தது. இந்நிலையில் எமக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்டு எமது தலைவர்களை பயன்படுத்தி ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களை அநுரவினூடாக இந்தியாவின் எரிபொருளை இலங்கைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். ஒருவேளை கட்டணம் செலுத்த முடியாவிட்டால் எரிபொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும். இந்தியாவின் ஆக்கிரமிப்பு தொடர்பிலும் இந்தியாவின் விரிவாக்கம் தொடர்பிலும் இலங்கைக்கு கற்பித்த ரோஹண விஜயவீரவின் கீர்த்தி நாமத்தை தொடர்ந்து பயன்படுத்தி வரும் தலைவர்களின் தலைமைத்துவத்தினாலேயே இவ்வாறான திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதே இதிலுள்ள சிக்கலாகும்.

கடந்த காலங்களில் கூறியவற்றை மறந்துவிட்டார்கள். மோடி தோளில் கைவைத்ததும் அதில் மயங்கி நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்டுள்ளார்கள். இந்தியாவுக்கு ஏற்றவாறு எரிபொருள் குழாயை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள தீர்மானித்துள்ளார்கள்'' என்றார்.

## எட்கா ஒப்பந்தத்தில்...

நன்மையே என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்று இலங்கை மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் சந்தித்து கலந்துரையாடிய ஆளுநர் நந்தலால், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை விளக்கினார் .

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது எட்கா உடன்படிக்கை குறித்து இந்திய பிரதமர் தெரிவித்துள்ளமை குறித்து தமிழன் பத்திரிகை ஆசிரியர் ஆளுநரிடம் கேள்வியெழுப்பினார்.அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது ,

''எட்கா ஒப்பந்தத்தில் பாதகம் உள்ளதாக நான் கருதவில்லை. இந்தியா, மிகப் பெரிய பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கின்ற நாடு. இந்நிலையில் எட்கா உடன்படிக்கை தொடர்பில் அரசாங்கம் மற்றும் வர்த்தக அமைச்சு தீர்மானிக்க வேண்டும். ஆனால், என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், இந்தியாவுடனான பொருளாதார வர்த்தக உடன்படிக்கையானது எமக்கு நன்மை தருவதாக அமையும். வருடந்தோறும் ஏழு மற்றும் எட்டு வீதங்களின் பொருளாதார வளர்ச்சி காணப்படுகிறது. எனவே, அதுபோன்ற ஒரு மிகப் பெரிய சந்தையைக் கொண்ட நாட்டுடன் நாம் வர்த்தக தொடர்பை ஏற்படுத்துவது சிறந்ததாக அமையும். அதில் எவ்வாறான தொழில்நுட்பங்கள் இடம்பெறும் என்பதை பேசித் தீர்மானிக்கலாம். ஆனால், அந்த நாட்டுடனான வர்த்தக உடன்படிக்கை எமக்கு முக்கியமாகும். இந்தியா மட்டுமல்ல ஆசிய பசுபிக் நாடுகளுடன் நாம் அதிக வர்த்தக உடன்படிக்கைகளை செய்து கொள்ள வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

## பொருளாதார...

இடையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று (18) நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்தி, புதிய அரசாங்கத்துடன் தொடர்ந்தும் செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் கின் பொயோங் தெரிவித்தார்.

அதேபோல் நாட்டின் அனர்த்த நிலைமைகளின் போது உதவிகளை வழங்கியமை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை வழங்கியமைக்காகவும் நன்றி கூறிய ஜனாதிபதி சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் மத்திய அதிவேக வீதியில் சீனாவுக்குப் பொறுப்பான பகுதிகளை நிறைவு செய்ய வேண்டுமென வலியுறுத்திய ஜனாதிபதி, கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை மையப்படுத்தி விநியோக மத்தியஸ்தானம் மற்றும் நிறுவன வேலைத்திட்டங்களை விரைவாக ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவும் பல்வேறு காரணங்களுக்காக இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் சமுத்திர ஆய்வு பணிகளை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் உப தலைவர் இதன்போது கூறினார்.

அத்தோடு, ஹம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தை அண்மித்து சீன நிறுவனங்களை அமைத்து உலக அளவில் இலங்கைக்கு மிகச் சிறந்ததொரு பிரவேசத்தை ஏற்படுத்தித் கொடுக்க எதிர்பார்த்திருப்பதுடன்,எதிர்வரும் காலங்களில் சீனாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கும் ஜனாதிபதியை வரவேற்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலி, சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் மா யூசியாங் (Ma Youxiang) ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

## எட்கா ஒப்பந்தம்...

காகிதாதிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,''கடந்த கால அரசாங்கங்களை விமர்சித்து ஆளுந்தரப்பினர்களில் பெரும்பாலானோர் இலவசக் கல்வியின் ஊடாகவே கல்வி கற்றுள்ளார்கள். முன்னேற்றமடைந்துள்ளார்கள். கடந்த கால அரசாங்கங்கள் நாட்டுக்கு ஏதும் செய்யவில்லை என்று குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொய்யுரைக்க வேண்டாம். இலவசக் கல்வித் திட்டத்தில் 41 இலட்சம் மாணவர்கள் உள்ளடங்குகிறார்கள். இவர்களுள் 10 இலட்சம் மாணவர்களுக்கு மாத்திரம் 6,000 ரூபா நிவாரணத் தொகையை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொருளாதார பாதிப்பின் பின்னர் 56 சதவீதமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 25 சதவீதமான மாணவர்களின் கல்வி கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே மாணவர்கள் மத்தியில் வேறுபாடுகளை தோற்றுவிக்காமல் 41 இலட்சம் மாணவர்களுக்கும் 6,000 ரூபா கொடுப்பனவை வழங்கவேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சர்வதேச நாணய நிதியம் பற்றி இந்த சபையில் உரையாற்றினார். ஆனால், இந்திய விஜயம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் காலங்களில் எட்கா ஒப்பந்தத்துக்கு எதிராகவே செயற்பட்டார். ஆனால், இந்த ஒப்பந்தத்தின் உண்மைத் தன்மையை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவில்லை. சகல சிறந்த வெளிநாட்டு திட்டங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளமைக்கு மக்கள் விடுதலை முன்னணியும் நிச்சயம் பொறுப்புக் கூற வேண்டும். அதிலிருந்து தப்ப முடியாது'' என்றார்.

## கல்விச் சான்றிதழ்களை...

விசேட உரையொன்றை நிகழ்த்திய அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''எனது கல்வித் தகைமைகளுக்கு சவால் விடுத்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவும் நான் சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறவில்லை எனப் பல்வேறு தரப்பினரும் சமூக வலைத்தளங்கள் மூலம் முன்னெடுத்துவரும் போலிப் பிரசாரம் மற்றும் எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் முகமாக முன்னெடுக்கப்படும் சேறுபூசும் நடவடிக்கைகளுக்கும் பதிலளிக்க விரும்புகிறேன்.

நாளுக்கு நாள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சேறுபூசல்களுக்கு உரிய பதிலடியாக எனது கல்விச் சான்றிதழ்கள் சகலதையும் இன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கின்றேன். ஆரம்பக் கல்வி முதல் தற்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரிய கற்பிக்கும் திறந்த பல்கலைக்கழகத்தின் முதுமாணி கற்கை வரையான சகல கல்விச் சான்றிதழ்களையும் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

நான் கல்வி கற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட சகல சான்றிதழ்களையும் சகல பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்களாக சகல குடிமக்களாலும் பரிசீலித்துப் பார்க்க முடியும். நான் போலியான கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தது நிரூபிக்கப்பட்டால், எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி, எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பவற்றிலிருந்து நீங்குவது மட்டுமல்லாமல், அரசியலில் இருந்தும் விலகுவேன்'' என்றார்.

## புலமைப்பரீட்சை...

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான முழு அறிக்கையை இன்று (19) காலை 09 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று (18) உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கு தொடர்பான இறுதித் தீர்ப்பு எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மூன்று வினாக்கள் முன்னரே வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளுக்கான பரீட்சையை மீண்டும் நடத்துமாறு கோரி, அந்தப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும் பெற்றோர் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே, யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாமினால் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் விரிவான அறிக்கையொன்றை இரகசியத்தன்மையை பாதுகாக்கும் வகையில் பொதியிட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் நீதியரசர்கள் குழாமினால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு முன்வைக்கப்பட்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் கடுவெல நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு அறிக்கைகளை உயர்நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உயர்நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளுக்கான பரீட்சையை மீண்டும் நடத்துமாறு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும் பெற்றோரினால் முன்வைக்கப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீதான விசாரணைகளை நேற்று நிறைவு செய்த உயர்நீதிமன்றம், அதன் இறுதித் தீர்ப்பை எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடுவதாகவும் அறிவித்துள்ளது. இந்த வழக்கு தொடர்பான எழுத்துமூல அறிவிப்புகள் இருந்தால் அவற்றை இன்று (19) காலை 9.00 மணிக்கு தாக்கல் செய்யுமாறு இருதரப்பு சட்டத்தரணிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## அர்ச்சுனாவின்...

வினா நேரத்தையடுத்து யாழ். மாவட்ட எம்.பியான இராமநாதன் அர்ச்சுனா யாழ். வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் விசேட கூற்றை முன்வைக்க சபாநாயகர் அனுமதியளித்தார்.

முதலில் யாழ். வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் தெளிவான கருத்துகளை அவர் முன்வைத்திருந்தபோதும், அவரின் உரையில் அநேகமான கருத்துகள் நிலையியற் கட்டளைச் சட்டத்துக்கும் சபைக்கும் முரணாகவும் இருந்தது. அவரின் உரையின் இடைநடுவில் குறுக்கிட்ட சபாநாயகர், விசேட கூற்று தொடர்பான ஆவணத்தில் என்ன இருக்கின்றதோ அதைமட்டும் பேசுமாறு வலியுறுத்தியபோதும் அர்ச்சுனா எம்.பி. அதனை செவிமடுக்கவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததுடன் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரையும் கடுமையாக சாடி பேசியிருந்தார். இதன்போது சபாநாயகரால் அர்ச்சுனா எம்.பிக்கு மீண்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலையில் எதிர்க்கட்சியினரும் அரச தரப்பினரும் அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக கருத்து முன்வைத்திருந்தார்கள். ஆனால் அர்ச்சுனா எம்.பி. தொடர்ந்தும் அந்த கருத்துக்கு முரணாக கூச்சலிட்டு பேசியிருந்தார். அதனை தொடர்ந்து சபையில் உரையாற்றிய சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்னாயக்க, அர்ச்சுனா எம்.பி. யாழ். வைத்தியசாலை தொடர்பில் விசேட கூற்றை முன்வைக்கின்றார். ஆனால் விசேட கூற்றை முன்வைப்பதாயின் அதனுடன் தொடர்புபட்ட அமைச்சருக்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்.

ஆனால் இந்தக் கூற்று தொடர்பில் சுகாதார அமைச்சருக்கு அறிவிக்கப்படவில்லை. ஆகையால் இவருக்கு பாராளுமன்ற செயலாளர் எவ்வாறு கூற்றை முன்வைக்க அனுமதித்தார் எனக் கேட்கின்றேன். அத்துடன் இவரின் முரண்பாடான கருத்துகள் தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் என்றார். இவ்வாறு சபை முதல்வரின் அறிவிப்பை தொடர்ந்தும் அர்ச்சுனா எம்.பி. முரணாக பேசியிருந்த நிலையில், நிலையியற் கட்டளைச் சட்டத்துக்கு முரணாக அவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஹன்சாட்டிலிருந்து நீக்கப்படுமென சபாநாயகர் அறிவித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சியில் அமர தனக்கு விருப்பமில்லை என்பதனால் சபையின் நடுவில் தனக்கு ஆசனம் தருமாறு சுயேச்சைக்குழு 17 இன் யாழ் மாவட்ட எம்.பி.யான இராமநாதன் அர்ச்சுனா சபாபீடத்திடம் கோரினார்.

## இந்தியாவுடன்...

ஜனாதிபதி இந்திய விஜயத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தாலும் அதுதொடர்பில் எந்தக் கருத்தும் வெளியிடவில்லை'' என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை(18) இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

''இந்தியாவுக்கான பயணத்தை நிறைவு செய்ததன் பின்னர், பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்றுக்கொண்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு ஏதும் அறிவிக்கவில்லை. இலங்கை - இந்திய கூட்டு அறிக்கையில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியாவுடன் இணக்கமாக செயற்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துகள் கிடையாது. ஆனாலும், இவ்விடயங்களில் கூடிய அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

இந்தியாவுடன் டிஜிட்டல், மின்சக்தி மற்றும் நேரடி தொடர்புகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் குழாய் முறைமை ஊடாக தொடர்புகளை பேணுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. குழாய் முறைமை ஊடாக தொடர்புகளை பேணுவதற்கு அதிக நிதி செலவிட நேரிடும். பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்குண்டுள்ள நிலையில் குழாய் முறைமைக்கு நிதி செலவு செய்வது சாத்தியமற்றது. ஆகவே, இதன்போது பல நிபந்தனைகளுக்கு நாடு என்ற ரீதியில் அடிபணிய நேரிடும்.

குழாய் முறைமை திட்டத்துக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே ஐக்கிய அரபு இராச்சியத்தின் முகவர் யார் என்பது குறிப்பிடப்படவில்லை. ஆகவே, நாட்டின் மின்சக்தி மற்றும் எரிசக்தி துறையின் பாதுகாப்பை இல்லாதொழிக்கும் சூழல் ஏற்படுத்தப்படுகிறது. ஜனாதிபதியாகவிருந்த ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களை பாதுகாத்ததால் ரணில் ராஜபக்ஷ என்று கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவை குறிப்பிட்டோம். தற்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுடன் மிக நெருக்கமாக செயற்பட்டு ரணிலின் கொள்கையை முழுமையாக அமுல்படுத்துவதால் ஜனாதிபதியை அநுர விக்கிரமசிங்க என்றே அழைக்க வேண்டியுள்ளது'' என்றார்.

## கோப் குழுவின்...

புதன்கிழமை(18) கோப் குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அதன்போது ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

''கடந்த காலங்களில் இந்த குழுக்களின் தலைமைப் பதவி ஒரு தடவை மாத்திரமே எதிர்க்கட்சியிடம் இருந்தது. பல சந்தர்ப்பங்களில் ஆளுங்கட்சியிடமே இருந்தது. எங்களிடையே நடந்த கலந்துரையாடலின் அடிப்படையில் உங்களின் கோரிக்கை இன்றியே கோபா குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சி எம்.பியொருவருக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், கோப் குழுவின் தலைமைப் பதவியை எங்களிடம் வைத்திருக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான காரணங்கள் உள்ளன. நிறுவனக் கட்டமைப்புகளை விசாரிக்க வேண்டியுள்ளது. அரச நிர்வாகத்துடன் குறித்த நிறுவனங்களின் தகவல்கள் வரும்.

இதன்படி அதனை முறையாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் கோப் குழுவின் தலைமைப் பதவியை ஆளுங்கட்சி வைத்திருக்கத் தீர்மானித்துள்ளது. இது நாம் அனைவரும் கலந்துரையாடி எடுத்த முடிவாகும்'' என்றார்.

# உயர் சட்டத்தரணி பதவி இலங்கையில் உள்ளதா இல்லையா?

## எம்.பிக்களுக்கிடையே பாராளுமன்றில் நேற்று குழப்பநிலை





உயர் சட்டத்தரணி என்ற பதவி இலங்கையில் உள்ளதா இல்லையா என்பது தொடர்பில் அரச, எதிர்க்கட்சிகளிலுள்ள சட்டத்தரணி அமைச்சர்கள், எம்.பிக்களுக்கிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. அஜித் பி. பெரேரா உயர் சட்டத்தரணி என்ற பதத்தைப் பயன்படுத்துவது சட்டவிரோதம். இலங்கை நீதிக் கட்டமைப்பில் அவ்வாறானதொரு பதவி கிடையாதென நீதியமைச்சர் ஹர்ஷ நாணயக்கார தெரிவித்த நிலையில் இந்தத் தர்க்கம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று (18) இடம் பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான அஜித் பி.பெரேரா,

''பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை சபையில் நான் இல்லாத நேரத்தில் நீதியமைச்சர் எனது கல்வித் தகைமை பற்றிய குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். 2023ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கத்தின் பிரகாரம் நான் சட்டத்தரணியாகச் (ஆலோசனை) செயற்படுகிறேன். ஆகவே, சட்டத்தரணியாக (கவுன்சில்) நான் சேவையாற்றுகிறேன். (கவுன்சில்) சட்டத்தரணி என்ற அடிப்படையில் உயர் சட்டத்தரணி என்று குறிப்பிட முடியும்''- என்றார்.

இதன்போது எழுந்த நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, அஜித் பி, பெரேரா எம்.பி. உயர் சட்டத்தரணி என்ற பதவியை எங்கு பெற்றார்?அவ்வாறு பெற்ற பதவிக்கான ஆதாரத்தை சபைக்கு சமர்ப்பிக்குமாறு மாத்திரமே வலியுறுத்தினேன் - என்றார்.

இதற்குப் பதிலளித்த அஜித் பி.பெரேரா எம்.பி., இவருக்கு நான் தெளிவாக நான் (கவுன்சில்)சட்டத்தரணி என்று குறிப்பிட்டேன், இவருக்கு சிங்களம் தெரியாதா? நீதியமைச்சர் 2020 மற்றும் 2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் தான் உயர் சட்டத்தரணியாவேன் தனக்கு வாக்களியுங்கள் என்று பிரசாரம் செய்துள்ளார் - என்றார்.

இதனையடுத்து மீண்டும் எழுந்த நீதியமைச்சர், நான் பொய்யுரைக்கவில்லை. இவருக்கு பதிலளித்து இவரைப் பெருமைப்படுத்த விரும்பவில்லை - என்றார்.

இதற்குப் பதிலளித்த அஜித் பி. பெரேரா எம்.பி., இங்கிலாந்து கல்விப் புலமையை இங்கு பயன்படுத்த முடியாது என்று குறிப்பிடுவதையிட்டு நீதியமைச்சர் வெட்கப்பட வேண்டும். பெயருக்கு முன்பாக கலாநிதி என்று பயன்படுத்திவிட்டு பின்னர் அச்சமடைந்து உண்மை வெளிப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு அறிவித்து கலாநிதி பட்டத்தை நீக்கிவிட்டு வெட்கமில்லாமல் பேசுகிறார் - என்று கடுமையாகச் சாடினார்.

இதனைத் தொடர்ந்து அரச மற்றும் எதிர்க்கட்சியினருக்கிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. அமைச்சர்கள், எம்.பிக்கள் உரையாற்ற அனுமதி கோரியபோது சபைக்கு தலைமை தாங்கிய பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அதற்கு அனுமதி வழங்கவில்லை.

இதன்போது எழுந்த பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதியமைச்சர் சுனில் வட்டகல, 25 ஆண்டு காலம் சட்டத்தரணியாக சேவையாற்றியுள்ளேன். இலங்கையின் நீதிக் கட்டமைப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மற்றும் சட்டத்தரணி என்று இருவேறு பிரிவுகள் மாத்திரமே உள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. அஜித் பி. பெரேரா குறிப்பிடுவதைப் போன்று உயர் சட்டத்தரணி என்ற பதவி கிடையாது - என்றார்.

இதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி., நளின் பண்டார முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல எதிர்க்கட்சி எம்.பி. என்று நினைத்துக்கொண்டு அரச தரப்பினர் பேசுகிறார்கள். அமைச்சரவை உறுப்பினர்களின் கல்வித் தகைமையும் சந்தேகத்துக்கிடமாகவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் கல்வித் தகைமையை பகிரங்கப்படுத்தியதைப் போன்று அமைச்சர்கள் தமது கல்வித் தகைமையை முடிந்தால் பகிரங்கப்படுத்துங்கள் பார்க்கலாம் - என்றார். இதனால் சபையில் சிறிது நேரம் குழப்பநிலை ஏற்பட்டது.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்காக வரவு - செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்துக

## பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவிப்பு



வடக்கு, கிழக்கில் விசேட தேவையுடைய மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் நலிவடைந்தவர்களாக உள்ளனர். அவர்கள் தொடர்பில் அரசாங்கம் கவனஞ்செலுத்தி எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அவர்களுக்கான வேலைத்திட்டங்களை உள்ளடக்க வேண்டுமென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (18) நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறைநிரப்புப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

''பொருளாதாரம் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள விடயங்கள் தொடர்பில் சபையில் ஜனாதிபதி உரையாற்றும்போது தெரிவித்திருந்தார். அதன்போது ஓய்வூதிய தொகையை மூவாயிரம் ரூபா அதிகரிப்பதாகக் கூறியிருந்தார். ஆனால், 2016 முதல் 2019 வரையில் ஓய்வில் சென்ற ஆசிரியர்களுக்கான நீண்டகாலப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. 2016ஆம் ஆண்டு பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த காலத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் அதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தில் பாதிக் கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விசேட தேவைக்குட்பட்ட மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் நலிவடைந்த வர்களாக உள்ளனர். அவர் களுக்கான விசேட திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இதனால் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் இவர்களுக்கான விசேட திட்டங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். இதேவேளை, வன்னியில் விவசாயிகள் யானைகளின் தொல்லையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதத்தில் 11 பேர் யானைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். இதனால் அங்கே யானை வேலிகளை அமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்'' – என்றார்.


**வாகன சந்தை – அநுராதபுரம்**

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NC BJE-48xx | BAJAJ | CT 100 |
| NC BCH-03xx | BAJAJ | PLATINA |
| CP BFB-48xx | BAJAJ | CT 100 |
| NC BHC-37xx | HONDA | DIO SCV 110 |
| NC BHS-48xx | HONDA | DIO SCV 110 |
| NW BFN-60xx | YAMAHA | FZ - S Ver 2.0 |
| NC BHV-35xx | HERO | PLEASURE |
| NC BBR-11xx | HERO | PLEASURE |
| NC BCF-54xx | HERO | PLEASURE |
| NC BIX-40xx | TVS | WEGO |
| NC BGR-19xx | TVS | SCOOTY PEPT |
| NC BDS-61xx | TVS | WEGO |

இடம்:–இல: 47/49, ஜயவேவ வீதி, யாழ்ப்பாண சந்தி, அநுராதபுரம்.

பார்வையிடும் திகதி:–20.12.2024(காலை 8.30 முதல்10.30 வரை)
மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:–20.12.2024 காலை 10.30 மணிமுதல்

விஸ்வா:–0774787096 தரிந்து:–0773147609

துரிதஅழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:– 0710356125

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

நிபந்தனைக்குட்பட்டது

AMF அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பி.எல்.சி.
தலைமை அலுவலகம் -146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய


# அலுவலக நேரத்தில் மது அருந்திய அரச திணைக்கள ஊழியர் குழு

## விசாரணைகள் ஆரம்பம்

(எம்.ஏ.அமீனுல்லா)

மத்திய மாகாண சபைக்குட்பட்ட அரச திணைக்கள ஊழியர் குழுவொன்று தம்புள்ளை பிரதேசத்துக்கு ஊக்குவிப்பு அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சிக்காக சென்று அங்கு ஆற்றங்கரையோரம் மதுபானம் அருந்திய சம்பவம் தொடர்பில் நேற்று (18) முதல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஊக்குவிப்புத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள நான்கு அரச ஊழியர்கள் மதுபானம் அருந்தும் பல புகைப்படங்களும் மத்திய மாகாண அமைச்சு மற்றும் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்குழுவினர் இது தொடர்பான அரச நிகழ்ச்சிக்காக திணைக்களத்தின் வாகனத்தில் சென்று அங்கு அவர்கள் மதுபானம் அருந்துகின்றபோது திணைக்களத்துக்குச் சொந்தமான ரீசேர்ட் அணிந்திருந்ததாகவும் புகைப்படங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

நான்கு பேர் மது அருந்தும் புகைப்படங்கள் மூலம் உறுதிசெய்த பின் இவர்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சிபாரிசு செய்யும் அறிக்கையும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

# கொட்டகலை லயன் குடியிருப்பில் தீ விபத்து



(எஸ்.கணேசன்)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ பிரிவில் 10 வீடுகளைக்கொண்ட 6ஆம் இலக்க தொடர் லயன் குடியிருப்பில் நேற்று (18) முற்பகல் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒரு வீடு தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், ஏனைய மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்த நான்கு வீடுகளிலும் இருந்த 22 பேர் உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீப்பிடித்தபோது வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிட்டதாகவும் அதன் பிறகு அயலவர்கள் ஓடிவந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

குறித்த வீட்டிலிருந்த பெருமளவான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என பெருமளவான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

மேலும், இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகத்தினூடாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தீ விபத்துக்கான காரணம் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை.இதேவேளை, இது தொடர்பாக திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்துக்கு பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களைக் கண்டறிய மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும் Circle of Well-being நலன்களில் AI இன் தாக்கம்

இன்றைய உலகில், எமது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையையும் துரிதமாக மாற்றியமைப்பதில் AI தொழில்நுட்பம் முக்கிய பங்காற்றுகின்றது. எமது நிதியை நாம் நிர்வகித்துக் கொள்வது முதல் எமது உளவியல் மற்றும் உடல்சார் நலனில் அக்கறை கொள்வது வரை அதன் செல்வாக்கு ஊடுருவியுள்ளது.

எமது தினசரி அனுபவங்களில் AI எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது மற்றும் எமது எதிர்காலத்தில் அதன் தாக்கம் எவ்வாறானதாக அமைந்திருக்கும் என்பதைப் பற்றி OCTAVE இன் பிரதம AI பொறியியலாளரான கலாநிதி சுமனரூபன் இராஜதுரை அவர்களுடன் யூனியன் அஷ்யூரன்ஸ் Circle of life நிகழ்ச்சியில் கலந்துரையாடப்பட்டது. இதில் அவர் பகிர்ந்து கொண்ட முக்கியமான விடயங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

### AI அறிமுகம்

எளிமையான சொற்களில், AI என்பது மனிதர்களைப் போல கற்றுக் கொள்ளவும் செயற்படவும் கூடிய ஆற்றல் வாய்ந்த நுண்ணறிவு இயந்திரங்கள் (Intelligent machines) ஆகும். மேலும் விளக்குவதானால், AI என்பது மிகப் பரந்துப்பட்ட தரவுகளிலிருந்து (data) தாமாகவே கற்று, அறிவையும் (knowledge) நுண்ணறிவையும் (intelligent) பெற்று, மனிதர்களைப் போன்று செயற்படக்கூடிய செயலிகள் எனலாம்.

இதற்கு சிறந்த உதாரணமாக ChatGPT ஐ குறிப்பிடலாம். உலகிலுள்ள சகல பத்திரிகைகள், புத்தகங்கள் மற்றும் இணையத்திலுள்ள சகல எழுத்துருசார் தரவுகளிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலமாக, இது அறிவையும் நுண்ணறிவையும் (ஒவ்வொரு வார்த்தையின் பொருள், வாக்கியங்களின் அமைப்பு, பல மொழிகள் - ஆங்கிலம், தமிழ், சிங்களம், ஜப்பானிய, பிரஞ்சு, முதலியன) பெற்றுக்கொள்கின்றது. தற்போது அந்த அறிவு மற்றும் நுண்ணறிவைக் கொண்டு, நாம் ChatGPT ஐ பயன்படுத்தும் போது அது மனிதன் இயங்குவதைப் போல செயற்படுகின்றது.

AI தொழில்நுட்பம் இன்று பல துறைகளில், குறிப்பாக சுகாதாரம், மோட்டார் வாகனத்துறை, கல்வி, வங்கி மற்றும் சில்லறை விற்பனை போன்றவற்றில் முக்கிய பங்காற்றி செயல்முறைகளை துரிதப்படுத்தி திறன் மிகுந்த தீர்வுகளை வழங்குகிறது.

### வாழ்வில் AI தாக்கம்

AI எவ்வாறு எமது நிதி (financial wellbeing), உளவியல் (emotional wellbeing) மற்றும் உடல்சார் (physical wellbeing) நலன்களில் தாக்கம் செலுத்துகின்றது என்பதைப் பார்ப்போம்.

### நிதி நலன்

நிதி நலன் என்றால்,நீண்ட கால நிதிப் பாதுகாப்பை (financial security) கருத்தில் கொண்டு உங்கள் பணத்தையும் வளங்களையும் எவ்வாறு பொறுப்புடன் நிர்வகிப்பது என்பதைக் கற்றுக்கொள்வதாகும். அதிகமாகச் செலவு செய்தல், சேமிக்காமல் இருப்பது, வரவு -செலவுத் திட்டங்களைச் செய்யாமை, முதலீடு செய்யாமை, அவசர நிதி இல்லாதது (emergency fund), பொறுப்பற்ற முறையில் கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்துதல் போன்றவை நிதி நலனை பாதிக்கும் செயற்பாடுகளாகும். யதார்த்தத்தில், மக்களின் நிதிசார் அறிவு மிகவும் குறைந்தமட்டத்தில் காணப்படுகின்றது. உதாரணமாக, பிரித்தானியாவில் அண்மையில் மேற்கொண்டிருந்த ஆய்வின் பிரகாரம், சுமார் 11.5 மில்லியன் மக்கள் 100 பவுண்ஸ் (40,000 ரூபாய்) க்கும் குறைவான சேமிப்பையே வைத்துள்ளனர்.

நிதி நல்வாழ்வு மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது அவர்களின் ஒட்டுமொத்த உள உடல் ஆரோக்கியம் மற்றும் அவர்களது உறவுகளின் மீது சாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. AI ஐ நிதிசார் கட்டமைப்பில் பயன்படுத்தும் போது, அது நிதிசார் தரவுகளை ஆராய்ந்து, நுண்ணறிவைப் பெற்று, பல தசாப்த கால அனுபவத்தைக் கொண்ட ஒரு நிபுணத்துவமட்டத்தில் செயலாற்றக்கூடியது. உதாரணமாக, சிங்கப்பூரின் DBS வங்கி, AI ஐ பயன்படுத்தி, ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் ஆயிரக்கான தரவுகளை ஆராய்ந்து, எவ்வாறு அவர்களின் சேமிப்புகளை அதிகரிக்கலாம், அவர்களின் நிதி இலக்குகளை நிர்ணயிக்கலாம், எங்கு அவர்கள் முதலிடலாம் போன்ற ஆலோசனைகளை வழங்குகின்றது. இந்த AI மாதிரிகளை பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் ஏனையவர்களை விட 83 சதவீதம் அதிகமாக சேமிப்பதாகவும் நான்கு மடங்கு அதிகமாக முதலீடு செய்வதாகவும் இரண்டு மடங்கு அதிகமாக காப்புறுதி செய்து கொள்வதாகவும் தரவுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு AI மூலம், அவர்களின் நிதி நலன் மிகவும் மேம்படுகின்றது.




கலாநிதி சுமனரூபன் ராஜதுரை

நிரஞ்சனி சண்முகராஜா

### உளவியல் நலன்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) அறிக்கையின் பிரகாரம், உலகில் சுமார் 800 மில்லியன் மக்கள் மனநலப் பிரச்சினைகளுடன் வாழ்வதாகவும் ஒவ்வொரு வருடமும் ஏழு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தற்கொலை செய்து கொள்வதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் தற்கொலைச் சம்பவங்கள் மிகவும் அதிகமாக இடம்பெறுகின்ற நாடாக இலங்கையுள்ளது.

தகைமை வாய்ந்த Cognitive Behavioral Therapist (CBT) ஒருவரை தேடிக் கொள்வது என்பது மிகவும் கடினமான காரியமாக அமைந்துள்ளது. மன அழுத்தம் மற்றும் அச்ச உணர்வு அதிகளவு காணப்படும் அசாதாரண நேரங்களில், உதாரணமாக இரவு 2 மணிக்கு கூட, சிலருக்கு உடனடி உதவி தேவைப்படலாம். குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளில், சிகிச்சைகளுக்கு அதிகளவு செலவாகின்றமை ஒரு பிரச்சினையாக அமைந்துள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் போதியளவு விழிப்புணர்வின்மை பிரச்சினையாக அமைந்துள்ளது. உளவியல் நிபுணர் ஒருவரை நாட முன்வராமையால்,பாதிக்கப்பட்டவர்கள் அமைதியாகவே இந்த உளைச்சலுக்கு முகங்கொடுக்கும் நிலையுள்ளது.

வளர்ந்து வரும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க, ஆரோக்கியத்துக்காக செயற்கை நுண்ணறிவை (AI) அறிவியல் அடிப்படையிலான தத்தெடுப்பை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று WHO கூறுகிறது. AI இனால் வலுவூட்டப்பட்ட செயலிகளினால் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

AI ஆளாக்கம் பெற்ற மனநல செயலிகள், உயர் தர நிபுணருக்கு இணையான சேவைகளை உதவி தேவையானவர்களுக்கு செலவு குறைவாக மற்றும் 24/7 அளிக்கின்றன. Together by Renee எனும் App இதற்கு ஒரு உதாரணமாகும். உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் ஏற்கனவே AI ஆளாக்கம் பெற்ற மனநல செயலிகளைப் தினமும் பயன்படுத்தி வருகின்றனர்.

### உடல்சார் நலன்

Apple Watch, Fitbit போன்ற அணியக்கூடிய சாதனங்களினூடாக உடலின் இதயத் துடிப்பு, குருதி அழுத்தம் போன்ற தரவுகளை சேகரித்து அவற்றை AI மூலமாக ஆராய்ந்து, ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமான உடல்நலன் சார் ஆலோசனைகளை வழங்குகின்றன. இந்த செயலிகள், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உடல்சார் உபாதைகளை பல வாரங்களுக்கு அல்லது மாதங்களுக்கு முன்னதாக கண்டறிந்து, அது பற்றி மக்களுக்கு அறிவுறுத்தும் திறன் வாய்ந்தவை.

மருத்துவத்துறையில், AI மிக முக்கியமான பங்கு வகிக்க தொடங்கியிருக்கிறது. உதாரணமாக. AI உதவியுடன் செயற்படும் கருவிகள் மருத்துவர்களுக்கு புற்றுநோய் போன்ற நோய்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிய உதவி, நோயாளர்களின் சிகிச்சை பலன்களை கணிசமாக மேம்படுத்தி மிகத்தரமான மருத்துவ சேவைகளை வழங்குகிறது. மருத்துவத்துறையில் AI பல விதமாக பயன்பாட்டை நிரூபித்து வருகிறது. எதிர்காலத்தில், இந்தத் துறையில் மேலும் பல புதிய உதாரணங்கள் உருவாகும் என்ற நம்பிக்கை எனக்கு ள்ளது.

### சிறுவர் விருத்தியில் AI இன் செல்வாக்கு

நலன்களில் AI பல்வேறு வழிகளில் தாக்கம் செலுத்த ஆரம்பித்துள்ள நிலையில், அடுத்த தலைமுறையினர் மத்தியில் அதன் செல்வாக்கு என்பது மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாக அமைந்துள்ளது.

சிறுவர்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் நேர்த்தியான மற்றும் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. நேர்த்தியான விடயங்களை எடுத்துக் கொண்டால், AI தொழில்நுட்பத்தினூடாக அவர்களின் பயிலல் ஆற்றலை மேம்படுத்த முடியும். சிறுவர்களுக்கு ஆதரவாக AI இசைவாக்கமடைந்து உதவும் திறனை கொண்டுள்ளது. ஏனைய தொழில்நுட்பங்களைப் போன்று சிறுவர்கள் மத்தியில் எதிர்மறையான தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடியது.

உணர்வுசார் விருத்தி AI ஐ சிறுவர்கள் அதிகமாக பயன்படுத்தினால் அவர்கள் AI தான் உலகம் எனும் நம்பும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது. மனிதர்களுக்கிடையிலான தொடர்புகளை கொண்டிருப்பதற்கு முக்கியத்துவமளிக்காது, AI தான் உலகம் என தீர்மானித்து, அதனுடன் தமது வாழ்க்கையை முன்னெடுக்கும் சூழல் உருவாகலாம்.

சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் சிறுவர்களுக்கு சிந்திக்கும் ஆற்றலை பயிற்றுவிப்பது முக்கியமானதாகும். AI வளர்ச்சியடைந்து வரும் நிலையில், அவற்றை கேள்விக்குட்படுத்தவும் AI இனால் தயாரிக்கப்பட்ட பொருளடக்கத்தை மதிப்பாய்வு செய்யக்கூடியவர்களாகவும் அவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சமூக திறன்கள் - அளவுக்கு அதிகமாக AI இல் தங்கியிருப்பது, சமூக திறன்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால், அவர்களின் சமூகத்திறன்கள், ஏனையோருடன் பழகுதல், ஏனையவர்களின் உணர்ச்சிகளை புரிந்து கொள்ளுதல், நண்பர்களை கொண்டிருப்பது போன்ற திறன் விருத்திகள் பாதிக்கப்படலாம். கவனமான முறையில் AI இன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களை சமநிலைப்படுத்துவதனூடாக, எதிர்கால சந்ததியினர் மத்தியில் நிதிசார்,உடல்சார், உளசார் வளர்ச்சியை நேர்த்தியான முறையில் மேம்படுத்த முடியும்.

### AI இலுள்ள பிரச்சினைகள் மற்றும் அபாயங்களைக் குறைத்தல்

ஏனைய தொழில்நுட்பங்களைப் போன்று AI இலும் குறைபாடுகள் உள்ளன. அவற்றினூடாக சமூகப் பிரச்சினைகளும் எழுகின்றன. உதாரணமாக, AI பொய்யான தகவல்களை உண்மையானதைப் போல உருவாக்கி மக்களை தவறாக வழிநடத்தக்கூடியது. அண்மையில் ChatGPT நபர் ஒருவருக்கு மனைவியிடமிருந்து விவாகரத்தைப் பெறுமாறு அறிவுறுத்திய விடயம், உணவுத் தயாரிப்பு முறையை வழங்கும் போது, குளோரினைப் பாவித்து உணவை தயாரிக்குமாறு தெரிவித்திருந்தமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

மக்கள் பெருமளவு AI தொழில்நுட்பத்தை சார்ந்திருந்தால், அவர்கள் ஆக்கத்திறன், ஞாபகசக்தி போன்றவற்றை பயன்படுத்தாமல் deepfakes AI இல் தங்கியிருக்கும் நிலை உருவாகலாம். இதற்கு மேலதிகமாக, AI பக்கச்சார்பாக இயங்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளது. அரசியல் கட்சி சார்பாக, இன ரீதியாக அல்லது மொழி ரீதியாக பக்கச்சார்பாக இயங்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

மற்றுமொரு பெரும் பிரச்சினையாக AI ஐ பயன்படுத்தி போலியான வீடியோக்கள் அல்லது ஓடியோக்களை (உதாரணம் - deepfakes) உருவாக்க முடியும். இது வளர்ந்து வரும் பிரச்சினையாக உள்ளது. AI பயன்படுத்தி தயாரிக்கப்படும் இவ்வாறான வீடியோக்கள் மற்றும் ஓடியோக்கள் உண்மையான மனிதரைப் போலவே அமைந்திருக்கின்றன. அதை பார்ப்பவர்களும் கேட்பவர்களும் உண்மையாகவே அந்த நபரே செயற்படுவதாக கருதும் நிலை ஏற்படுகின்றது.

மிக அபாயகரமான பிரச்சினையாக, AI மனித ஆற்றலை முந்தி அவர்களை கட்டுப்படுத்தக்கூடிய நிலைக்கு வருமா எனும் ஒரு கேள்வி நிலவுகின்றது. இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு பெற்ற ஜெப்ரி ஹின்டன் 40 வருட காலமாக AI தொழில்நுட்பம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளார். அடுத்த 20 வருடங்களினுள் AI என்பது மனிதர்களை விட மிகவும் மதிநுட்பத்திறன் படைத்ததாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன என எச்சரிக்கிறார். இவ்வாறு நடக்குமானால், இது மனித குலத்தை இல்லாமல் செய்யக்கூடிய நிலைக்கு வரக்கூடும் என்பது அவரின் எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

இதற்கு தீர்வாக, ஐக்கிய நாடுகள் அமைப்புகள் போன்ற சர்வதேச அமைப்புகள் இணைந்து AI ஐ பயன்படுத்துவதற்கான ஒழுக்க நெறிமுறைகள் (best practices),சிறந்த செயற்பாடுகள் (ethical guidelines) மற்றும் வழிகாட்டல்களை (guides) உருவாக்க வேண்டும். இதனூடாக முன்னேற்றங்கள் வரலாம். அரசாங்கங்களும் சட்டங்களை இயற்றிய வண்ணமுள்ளன. அணு ஆயுதங்கள், இரசாயனவியல் ஆயுதங்களை அல்லது உயிரியல் ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு உலக நாடுகளுக்கிடையே உள்ள ஒப்பந்தங்களைப் போன்று, AI தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது மற்றும் கட்டுப்பத்துவது தொடர்பில் உலக நாடுகளுக்கிடையே ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது எலன் மஸ்க் மற்றும் ஜெப்ரி ஹின்டன் போன்ற நிபுணர்களின் பரிந்துரையாக அமைந்துள்ளது.

### இறுதிக் குறிப்புகள்

எமது நிதிசார், உளவியல்சார் மற்றும் உடல்சார் நலன்களை மேம்படுத்தும் ஆற்றலை AI பெருமளவில் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், அதில் காணப்படும் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களை ஆராய்ந்து சமநிலைப்படுத்திக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாகும். பொறுப்பு வாய்ந்த பாவனையை ஊக்குவிப்பது, ஆழமாக சிந்தித்தலை ஊக்குவித்தல் மற்றும் ஒழுக்கமான செயற்பாட்டு நெறிகளை (ethical guidelines) நடைமுறைப்படுத்தல் போன்றவற்றினூடாக, AI இன் உச்ச பலனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2024 டிசம்பர் 19ஆம் திகதி, வியாழக்கிழமை**

# ஜனாஸா எரிப்பு அநீதிக்கு நீதி கட்டாயத் தேவை!

கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமை தொடர்பான விவரங்களை வெளிப்படுத்துமாறு முஸ்லிம் எம்.பிக்கள் கேள்வி எழுப்பியதால், இந்த விடயம் தொடர்பில் நேற்றுமுன்தினம் (17) பாராளுமன்ற சபையில் பரபரப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆளுந்தரப்பு எம்.பிக்களுக்கும் எதிர்த்தரப்பினருக்குமிடையில் இந்த விடயம் தொடர்பில் நீண்ட கருத்துப் பரிமாற்றம் இடம் பெற்றதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் முன்வைத்த வேண்டுகோளை நிராகரித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கொரோனா தொற்றில் மரணித்து தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர், விபரங்களை வெளியிடுவதற்கு வைத்திய நெறிமுறையில் இடமில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது ரவூப் ஹக்கீம் எம்.பி., கொரோனா தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்யவேண்டுமென அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைவாக, தகனம் செய்யப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை யாது? அவ்வாறு மரணித்த ஒவ்வொரு நபரினதும் பெயர், பாலினம், இனம், சமயம் நெருங்கிய உறவினரின் பெயர், முகவரி, சடலம் தகனம் செய்யப்பட்ட திகதி மற்றும் இடம் தனித்தனியே தெரிவிக்க முடியுமா எனக் கேட்டார்.

இதற்கு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளிக்கையில்,

கொரோனா தொற்றில் மரணித்தவர்களில் 13,183 பேர் தகனம் செய்யப்பட்டுள்ளனர். தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர், பாலினம், இனம், சமயம் நெருங்கிய உறவினரின் பெயர், முகவரி, சடலம் தகனம் செய்யப்பட்ட திகதி மற்றும் இடம் போன்ற தகவல்களை வெளியிட முடியாமல் இருக்கிறது. ஏனெனில், வைத்திய அடிப்படை நெறிமுறைக்கமைய இந்த விடயங்களைத் தெரிவிக்க முடியாது - என்றார்.

இதன்போது எழுந்த ரவூப் ஹக்கீம், அமைச்சரின் இந்தப் பதில் ஆச்சரியமளிக்கின்றது. நான் கேட்டிருந்த இந்தத் தகவல்கள் அரசாங்கம் பாதுகாத்து வைத்திருக்க வேண்டிய தகவல்கள். இது கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் உணர்ச்சிபூர்வமான விடயமாகும். தொற்றுநோய் தொடர்பான விசேட நிபுணரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான நிமல் அபேசிங்க இந்தப் பிரச்சினை தொடர்பில் நேர்மையாக உண்மையான கருத்துகளை வெளியிட்டிருந்தார். இருந்தபோதும் இதுபோன்ற அறிக்கைகள் அரசாங்கத்திடம் இருக்கவேண்டும்.அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும். இவற்றை மூடி மறைத்துக்கொண்டு வெளிப்படுத்த முடியாதென கூற முடியாது என்பதை சுகாதார அமைச்சரும் அறிந்து வைத்திருப்பார் என்று கருதுகிறேன். இது சுகாதார அமைச்சின் நேர்மைக்கும் களங்கத்தை ஏற்படுத்திவிடும் என்றும் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் பரவியிருந்த காலத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிராக கட்டவிழ்ந்த வன்மம் , அதன் நிழல் இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கிறது.சாதாரணமாக ஒருவர் இறந்தாலே அவரின் முழு விபரங்களையும் விவரமாக பெறக்கூடிய ஒரு நாட்டில் கொரோனா தாக்கங்களுக்கு உள்ளானவர்களின் உடல்களை மட்டும் எந்த பதிவுமில்லாமல் எரிக்க நடவடிக்கை எடுத்ததில் உள்ள நியாயம் என்ன?

இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களை எரித்தமையே அவர்களின் நம்பிக்கைக்கு எதிரான தவறான செயல் என்பதற்கப்பால் இப்போது அவர்களின் விபரங்களைக் கூட வெளியிட மறுப்பது அப்பட்டமான மனித உரிமை மீறல் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டமைக்கு நிதியால் நட்டஈடு வழங்கினால் கூட அந்த வேதனைக்கு ஈடாகாதென சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க ஒருபுறம் சொல்லும் அதேசமயம் மறுபுறம் இறந்தவர்களின் விபரங்களைக்கூட தரமுடியாதென மறுக்கிறார் அமைச்சர் நலிந்த. கொரோனா காலத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக இருந்த டாக்டர் அனில் ஜாசிங்க , இப்போது சுகாதார அமைச்சின் செயலாளராக இருப்பதால் இந்த விபரங்களை வெளியிடுவதில் சிக்கல்கள் இருக்க முடியாது.

ஆனால் அங்கேதான் பிரச்சினையே இருக்கிறது. கொரோனா ஜனாஸாக்களை எரிப்பதென்ற முடிவு அரசியல் தீர்மானம் அல்ல. அது சுகாதார அமைச்சின் முடிவென அப்போதைய பேச்சுகளின்போது டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்திருந்தார்.

அரசியல் அழுத்தங்களினால் அவர் அப்படி கூறினார் என்று இப்போது சாக்குப்போக்கு கூறி தப்பித்துவிட முடியாது. இப்போதுகூட பழைய விபரங்களை வெளியிட்டால் அது சுகாதார அமைச்சுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதனால்தான் விபரங்கள் இல்லையென்று அரசு கூறுகிறதா என்பது தெரியவில்லை.

அமைச்சரவையில் முஸ்லிம் ஒருவர் கூட அநுரகுமார அரசில் இல்லாதபடியால் இந்த விடயத்தை பாராளுமன்றத்தில் மட்டுமே விவாதிக்க முடியும். ஆனால் பாராளுமன்றமும் கைவிரித்தால் என்ன செய்வது ? ஜனாஸாக்கள் விடயத்தில் இப்போதாவது நீதியை நிலைநாட்ட வேண்டும் அரசாங்கம். அந்த காலத்தில் அதற்கான உத்தரவை பிறப்பித்தவர்கள் யார் என்பதை கண்டறிந்து அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைவிடுத்து எதுவும் தெரியாதென்று கைவிரித்தால் கோட்டா அரசுக்கும் இந்த அரசுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.

## இன்றைய நாளில்...

- **1871 – யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மதகுருப் பதவிகள் வழங்கப்பட்டன.**
- **1877 – யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் வாந்திபேதி மற்றும் சின்னம்மை நோய் பரவியதில் பலர் இறந்தனர்.**
- **1929 – இந்திய தேசிய காங்கிரஸ் இந்தியாவின் விடுதலையை அறிவித்தது.**
- **1932 – பி.பி.சி. உலக சேவை ஆரம்பமானது.**
- **1972 – அப்பலோ திட்டம்: சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச் சென்ற அப்பலோ-17 பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பியது.**
- **1983 – உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக் கிண்ணம் பிரேஸிலில் அந்நாட்டு உதைபந்தாட்ட அமைப்பின் தலைமையகத்திலிருந்து திருடப்பட்டது.**
- **2001 – அதியுயர் வளிமண்டல அழுத்தம் (1085.6 hPa) மங்கோலியாவில் பதிவுசெய்யப்பட்டது.**
- **2013 – கையா விண்கலத்தை ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஏவியது.**

# மக்களுக்கு நிவாரணம்...

நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்குச் செல்லும் என்ற எண்ணம் தோற்றுவிக்கப் படுகிறது. 2028 ஆம் ஆண்டிலும் எமது அரசாங்கமே இருக்கப்போகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்து உரையாற்றிய ஜனாதிபதி அநுர மேலும் கூறியதாவது,

கடன் மறுசீரமைப்பு தொடர்பான மூன்று மணித்தியால விவாதம் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்போது தற்போது வரையான கடன் மறுசீரமைப்பு வழிமுறை தொடர்பிலும் அதன்போதான அடைவுகள் குறித்தும் எமது அமைச்சர்களும் நிதி பிரதி அமைச்சரும் தெளிவூட்டினர்.அதனால் அதுபற்றி விரிவாக பேசவில்லை.

இருப்பினும், சமூகத்தில் 2028 ஆம் ஆண்டில் கடன் செலுத்தப்படவிருப்பதால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்குச் செல்லும் என்ற எண்ணம் தோற்றுவிக்கப்படுகிறது. 2028 ஆம் ஆண்டிலும் எமது அரசாங்கமே இருக்கப்போகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அதேபோல் 2022 - 2023 களில் வந்தது போன்ற நிலைமை மீண்டும் வருவதற்கு நாம் ஒருபோதும் இடமளியோம். எமது வெளிநாட்டு கையிருப்பை 2028 ஆம் ஆண்டளவில் 15.1 டொலர் பில்லியன்களாக அதிகரித்துக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் நாம் இருக்கிறோம். 15.1 டொலர் பில்லியன்களை ஈட்டிக்கொள்ள முடியும் என்ற வலுவான நம்பிக்கை எமக்கு இருக்கிறது. இதுபற்றி பேசும் போது பலரும் ஆலோசனைகளை வழங்கினர். அவை நல்ல ஆலோசனைகள். பெருமளவில் தகவல்களை முன்வைத்தனர். அவையும் நல்ல தகவல்கள். ஆனால் முக்கியமான விடயம் என்ன?

இப்போது நாம் 12.55 டொலர் பில்லியன்களையும் அதாவது 12550 டொலர் மில்லியன்களையும் அதேபோல் செலுத்தத் தவறிய கடன் 1.7 டொலர் பில்லியன்களையும் அதாவது 1700 டொலர் மில்லியன்களையும் நாம் மறுசீரமைப்புக்கு உட்படுத்தியுள்ளோம். இந்த 12550 டொலர் பில்லியன்களில், 11550 டொலர் மில்லியன்கள் 2015 - 2019 வரையான அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடனாகும். அன்று இந்த ஆலோசனைகளை வழங்கியிருந்தால் எமது நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்காது. அதனால் ஆலோசனைகள் தாமதமாகிவிட்டன என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆலோசனைகளை சரியான நேரத்தில் வழங்குவதே அதற்கான பெறுமதியாகும். மிகத் தாமதமாகி ஆலோசனை வழங்கினால் அது வலிதற்றதாகிவிடும். இந்த விடயம் புரிகிறதா?

அதேபோல், இன்று நான் விசேடமாக கவனம் செலுத்த விரும்புவது, சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டாவது மீளாய்வை நிறைவு செய்து இரண்டாவது தவணைக்கும் அனுமதி பெறப்பட்டிருந்தது. நாம் அதிகாரத்தை கைப்பற்றும் வேளையில் மூன்றாவது மீளாய்வு தாமதமாகியிருந்தது. அதனை, செப்டெம்பரில் அதனை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. இருப்பினும் தேர்தல் நடக்கின்ற வேளையில் மூன்றாவது மீளாய்வுக்கு தயாரில்லை என்பதை சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருந்தது. அதன்படி, பொதுத்தேர்தல் நிறைவடைந்த பின்னர் நவம்பர் 16 ஆம் திகதி நாம் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்துடன் மூன்றாவது மீளாய்வை ஆரம்பித்தோம். இரண்டாவது மீளாய்வில் முன்னைய அரசாங்கத்தினால் எட்டப்பட்ட அடைவுகள்,இணக்கப்பாடுகள் பல காணப்பட்டன.

அவற்றில் ஒன்று, வாடகை வருமான சொத்துக்கள் மீது 2025 ஆம் ஆண்டிலிருந்து வாடகை வருமான வரி விதிப்பது குறித்த இணக்கப்பாடு இரண்டாவது மீளாய்வில் எட்டப்பட்டிருந்தது. அதேபோல் ஏற்றுமதிச் சேவை மீது நூற்றுக்கு முப்பது வீதமான நிறுவன வரி, ஏற்றுமதிச் சேவைக்கு 30 வீத வரி விதிக்கவும் இரண்டாவது மீளாய்வில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதேநேரம், ஜனவரியிலிருந்து விசேட வர்த்தக பொருட்கள் மீதான வரியை நீக்கி, பெறுமதி சேர் வரியுடன் இணைப்பது குறித்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த விசேட வர்த்தகப் பொருட்கள் மீதான சேவை வரியினாலேயே எமது நாட்டின் உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்காக வரி விதிப்பு, வரி அதிகரிப்பு, வரி குறைப்பு ஆகியவற்றை செய்கிறோம். இரண்டாவது மீளாய்வுக் கூட்டத்தில் இந்த சட்டத்தை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு பதிலாக வற் வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டது. அதேபோல், தனிப்பட்ட வருமானம் மீதான வரியற்ற எல்லைகளை அவ்வண்ணமே தக்க வைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில், இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியை (Value Added Tax) நீக்குவதற்கான இணக்கமும் எட்டப்பட்டிருந்தது. குறிப்பாக எமது நாட்டின் வர்த்தகர்களுக்கு வற் வரி செலுத்துவதில் நெருக்கடி ஏற்பட் டுள்ள காலம் என்பதை நாம் அறிவோம். இந்த வற் வரியின் ஊடாக வர்த்தகர்களுக்கு அவசியமான கடனை விரைவில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்தது. இருப்பினும் அதனை நீக்குவதற்கான யோசனையொன்று கொண்டுவரப்பட்டிருந்தது. இதுவே இரண்டாவது மீளாய்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடாகும். மூன்றாவது மீளாய்வை ஆரம்பிக்கும் வேலையில் எமது யோசனைகள் என்னவாக இருந்தது? எமது நாட்டின் தொழில்வான்மையாளர் மீது விதிக்கப்பட்டிருந்த வரி தொடர்பில் தொழில்வான்மையாளர்கள் அதிருப்தியில் இருந்தனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம், வைத்தியர்களின் சங்கம், வங்கி முகாமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட பெருமளவானவோர் இந்த உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) தொடர்பில் அதிருப்தியில் இருந்தனர்.

நாம் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தோம். நாம் வரி விதிக்கப்போகும் எல்லையை ஒரு இலட்சத்திலிருந்து ஒன்றரை இலட்சங்களாக அதிகரித்துள்ளோம். அதேபோல், நூற்றுக்கு ஆறு வீதத்துக்குள் அடங்கும் வகையில் தனிநபர் வருமான வரியின் முதல் தொகுதியை, 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரையில் அதிகரிக்கும் வகையில் திருத்தம் செய்ய எம்மால் முடிந்துள்ளது. அதனால் ஒன்றரை இலட்சம் மாதச் சம்பளம் பெறுவோர் வரியிலிருந்து 100 வீதம் விடுவிக்கப்படுவர். 2 இலட்சம் சம்பளம் பெறுவோர் 75 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படுவர். இரண்டரை இலட்சம் சம்பளம் பெறுபவரின் வரி 61 சதவீதத்தினால் விடுவிக்கப்படுவர். 3 இலட்சம் சம்பளம் பெறுவோர் 47 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படுவர். மூன்றரை இலட்சம் சம்பளம் பெறுவோர் 25 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படுவர். அதனால் அதிக வருமானம் பெறுவோருக்கு குறைந்த சலுகையும் குறைந்த சம்பளம் பெறுவோர் அதிக சலுகையும் கிடைக்கும் வகையில் உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) இனை குறைத்துக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது.

அடுத்ததாக எமது பிள்ளைகளின் போஷாக்கு குறைப்பாடு தொடர்பான பிரச்சினை குறித்து சிறப்பு கவனம் செலுத்தியுள்ளோம். கடந்த அரசாங்கத்தினால் பால்மா மற்றும் யோகட் போன்ற உற்பத்திகளுக்கு வற் வரி விதிக்கப்பட்டிருந்தது உங்களுக்கு நினைவிருக்கும். அதனால் மூன்றாவது மீளாய்வில் எமது நாட்டில் உற்பத்திச் செய்யப்படும் பால் சார் உற்பத்திகளின் மீதான பெறுமதி சேர் வரி குறைக்க வேண்டும் என்ற இணக்கப்பாட்டை எட்டியுள்ளோம். கடந்த அரசாங்கம் இரண்டாவது மீளாய்வுக் கூட்டத்தில் 30 சதவீத ஏற்றுமதிச் சேவை வரி விதிக்கப்படும் என இணக்கம் காண்டிருந்தது. அதனை 15 சதவீதமாக குறைப்பதற்கான இணக்கப்பாட்டை நாம் எட்டியுள்ளோம். சேவை ஏற்றுமதிக்கு 15 சதவீத வரியென்பது சர்வதேசத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலையாகும். அந்த அளவில் வரியை குறைத்துக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது. அதேபோல் (Withholding Tax) இனை ஐந்து சதவீத்திலிருந்து பத்து சதவீதமாக அதிகரித்துக்கொள்ள இணக்கம் எட்டப்பட்டது. அதனால் ஒரு கேள்வி எழக்கூடும். எமது முதியவர்கள், ஓய்வுபெற்றவர்கள், ஒரு தொகை பணத்தை வைப்பிலிட்டு அந்த வட்டியில் வாழ்கிறார்கள். அவ்வாறானவர்கள் மாதம் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான வரியை பெற்றால் மட்டுமே அவர் வரி விதிப்புக்குள் உள்வாங்கப்படுவார். சாதாரணமாக ஒன்றரை இலட்சம் வருமானம் இருக்க வேண்டும். ஆனால் (Withholding Tax) வரியின் ஊடாக, ஒன்றரை இலட்சத்துக்கு குறைவான வரியை பெற்றாலும், (Withholding Tax) என்ற வகையில் பேணிச் செல்லும் இயலுமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குள்ளது. அதனால் இறைவரித் திணைக்களத்துக்குள் எந்தவொரு பிரஜையும் தான் குறித்ததொரு வரிக்கு உரித்தானவர் அல்லவென நினைக்கும் பட்சத்தில், மாத வருமானம் அல்லது வட்டி வருமானம் ஒன்றரை இலட்சமாக இல்லாமல் இருக்குமாயின், தனக்கு வருடமொன்றுக்கு கிடைக்கும் வருமானம் 18 இலட்சம் அல்லவென எவரேனும் நினைத்தால், அவர்கள் உள்நாட்டு வருமான வரி திணைக்களத்துக்குச் சென்று தமது வரி தொடர்பில் தகவல்களை வழங்கி வரி விதிப்பை தவிர்த்துகொள்ள முடியும்.

இதனால், ஓய்வூதியதாரர்கள் போன்ற மாதாந்தம் ஒன்றரை இலட்சம் என்ற வரி வரம்புக்கு குறைந்த வருமானத்தை ஈட்டும், 10 சதவீதத்துக்கும் குறைந்த வருமானத்துக்கு வரி செலுத்துவோரிடமிருந்து (Withholding Tax) இனைஅறவிடாமலிருக்கவும் குறைந்த வருமானம் காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பம் உள்ளது. அவ்வாறானவர்களுக்கு விரைவான ஆலோசனைகளை வழங்குவதற்கான நிலையங்களை கொழும்பிலுள்ள தலைமையகத்திலும் நாடளாவிய ரீதியிலுள்ள அலுவலகங்களிலும் ஸ்தாபிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்பட இடமளியோம். அதனால் எமது வரியை விஸ்தரிப்பதற்கான நோக்கமே அன்றி, குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு மேலதிக (Withholding Tax) இனை விதிப்பதற்கான தேவை ஏற்படாது.

**வாகன சந்தை**

அடுத்ததாக, வாகனச் சந்தையை கட்டம் கட்டமாக திறந்து விட வேண்டும். ஏனென்றால் அதனுடன் இணைந்த தொழிற்றுறையொன்றுள்ளது. அதனுடன் தொடர்புள்ள தொழில்முனைவோர் உள்ளனர். நீண்ட காலத்துக்கு வாகன சந்தையை தடுத்து வைக்க முடியாது. அதனால் 3 கட்டங்களில் இந்த வாகன சந்தையை திறந்து விட திட்டமிட்டுள்ளோம். பயணிகள் போக்குவரத்து பஸ் மற்றும் விசேட தேவைகளுக்கு பயன்படுத்தும் கார் என்பவற்றை கடந்த 14 ஆம் திகதி முதல் இறக்குமதி செய்வதற்கு ஏற்ற வகையில் திறந்து விட்டுள்ளோம். பண்டப் போக்குவரத்துக்கான கார் மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டுக்கான கார் என்பவற்றுக்கு அனுமதி வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். தனிப்பட்ட பயன்பாட்டுக்கான கார் அனுமதியை 2025 பெப்ரவரி முதல் அமுல்படுத்த இருக்கிறோம்.

இதனால் மீண்டும் டொலர் நெருக்கடி ஏற்படும் என யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. மத்திய வங்கியுடன் நீண்ட கலந்துரையாடல் நடத்தி இந்த வாகன இறக்குமதியினால் வெளிச்செல்லும் டொலரின் அளவு தொடர்பில் மதிப்பீடு செய்துள்ளோம். அது எந்தளவுக்கு எமது பொருளாதாரத்துக்கு தாங்கக் கூடியதாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளோம். எமது பொருளாதாரத்தை மீளமைக்க வேண்டுமானால் இந்த வாகன சந்தையை திறந்து விட வேண்டும். அதனால் கடுமையான நிலைப்பாட்டில் இருந்து இந்த வாகன சந்தையை திறந்து விடுகிறோம். ஏனென்றால் இது முக்கியமானது என நாம் கருதுகிறோம்.

குறிப்பாக மூன்றாவது மீளாய்வுடன் தொடர்பு இல்லாவிட்டாலும் கூட இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த பராட்டே சட்டம் 2024 டிசம்பர் 15 ஆம் திகதி முதல் முடிவுக்கு வருகிறது. சிறுமற்றும் மத்திய தர தொழில்முனைவோர் இன்னும் வழமை நிலைக்குத் திரும்பவில்லை. எனவே அவர்களுக்கு சிறிது அவகாசம் வழங்க வேண்டும். 2024.09.31 ஆம் திகதி அளவில் செலுத்த வேண்டிய முழு கடன் 1385 பில்லியன் என கணிப்பிடப்பட்டுள்ளது. முழு கடன் பெற்றோர் எண்ணிக்கை 7 52 896 . முழு கடன் பெற்றோர் தொகையில் 99 வீதமானோர் பெற்ற தொகை 25 மில்லியனை விடக் குறைவாகும். இது தான் புள்ளிவிபரம்.கடன் பெற்றோர் 7 52 896 பேர் இருந்தபோதும் அதில் 99 வீதமானவர்கள் 25 மில்லியனை விட குறைவாக கடனை செலுத்தாதோர்களாகும்.

அதனால் பராட்டே சட்டம் முழுமையாக இடைநிறுத்தப்பட்டிருப்பதால் வங்கிக் கட்டமைப்பிலும் நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது. ஏனென்றால் அவர்களிடம் இருப்பதும் மக்களின் வைப்புப் பணமாகும். அது தவிர வேறு வழியில் வங்கிக் கட்டமைப்புக்கு நிதி கிடைப்பதில்லை. எனவே மக்களின் வங்கிக் கட்டமைப்பிலுள்ள நிதியின் பாதுகாப்பு தொடர்பிலும் உத்தரவாதம் வழங்க வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் பல நிதி நிறுவனங்கள் வீழ்ச்சி அடைந்தன. அதன் பாதிப்பு பணிப்பாளர் சபைக்கோ வங்கித்துறையினர்களுக்கோ சென்றடைய வில்லை. வைப்பாளர்கள் தான் அதன் பாதிப்பை அனுபவித்தனர். பாரியளவில் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்ததில் வைப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சிலர் தற்கொலை செய்து கொண்டனர். இன்றும் ஈடிஐ போன்றவற்றில் பணம் வைப்புச் செய்தோர் பெரும் வேதனையுடன் உள்ளனர். இவ்வாறு பல நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்ததால் வைப்பாளர்களும் பொதுமக்களும் தான் பாதிக்கப்பட்டனர். அதனால் நாம் வங்கிக் கட்டமைப்பை பாதுகாப்பது மற்றும் சிறு மத்திய தொழில்முனைவோரை பாதுகாப்பது ஆகிய இரண்டையும் சமமாக கருத்திற் கொள்ள வேண்டும். அதன் படி டிசம்பர் 15 ஆம் திகதி நிறைவடைய 2025 மார்ச் 31 ஆம் திகதி வரை சுமார் மூன்றரை மாதங்கள் நீடிக்க நாம் முடிவு செய்துள்ளோம். அதில் செலுத்த வேண்டிய வட்டி தவிர கடன் தொகை 25 மில்லியனுக்குக் குறைவான கடனை மறுசீரமைக்க 2025 டிசம்பர் 15 வரை கால அவகாசம் வழங்குவதற்கு நாம் ஒரு திட்டத்தை தயாரித்துள்ளோம்.

இந்த மறுசீரமைப்புக்கு அவர்கள் தயாரா என்பது தொடர்பில் மார்ச் 31 ஆம் திகதி வங்கிகளுக்கு அறிவிக்க முடியும். வங்கிகளும் கடன் பெற்றோரும் கலந்துரையாடி முடிவு எடுக்க 31 ஆம் திகதி வரை கால அவகாசம் உள்ளது. தான் செலுத்த வேண்டிய கடன் தொடர்பில் மறுசீரமைப்பு திட்டமொன்றைத் தயாரிக்க முடியும். 99 வீதமான தொழில்முனைவோருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது.

செலுத்த வேண்டிய வட்டி தவிர்ந்த 25 மில்லியனுக்கும் 50 மில்லியனுக்கும் இடைப்பட்ட கடன் செலுத்த வேண்டியோர் மார்ச் 31 ஆம் திகதி மறுசீரமைப்புத் திட்டத்துக்கான தமது விருப்பத்தை வங்கிகளுக்கு முன்வைக்க முடியும். புதிய மறுசீரமைப்புக்கு 2025.09.15 ஆம் திகதி வரை மூன்று மாத காலம் வழங்குவோம். வங்கிக்கும் கடன் பெற்றோருக்கும் கடன் மறுசீரமைப்புத் திட்டம் பற்றி கலந்துரையாட 9 மாத காலம் உள்ளது.

செலுத்த வேண்டிய கடன் தொகை தவிர 50 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் பெற்றோரின் கடன் மறுசீரமப்புக்கு 2025.06.15 வரை 6 மாத கால அவகாசம் வழங்குகிறோம். அவர்களும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கான உடன்பாட்டை வங்கிக்கு அறிவிக்க வேண்டும். வங்கிக்கும் அவர்களுக்கும் இடையில் ஜூன்15 ஆம் திகதிக்கு முன்னர் மறுசீரமைப்புத் திட்ட உடன்பாடு எட்டப்பட வேண்டும்.அதனால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் பாதுகாப்பையும் வங்கிக ளின் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டே இந்தத் திட்டத்தைத் தயாரித்துள்ளோம். இது தொடர்பான உடன்பாட்டுக்கு நாம் வந்துள்ளோம்.

இந்தப் பொருளாதார நெருக்கடி நிலையில் எமது பொருளாதாரத்தின் கீழ் மட்டத்தில் உள்ள மக்கள் கருத்திற்கொள்ளப்படாத பொருளாதாரமாக மாறியது. அவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டனர். அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் அவர்கள் குறித்து கவனம் செலுத்தி அவர்களுக்கு சில நிவாரணங்கள் வழங்க எதிர்பார்க்கிறோம். அதற்கு முன்னர் இந்தப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய சில சட்டங்கள் உள்ளன. ஏப்ரல் மாதத்தில் இருந்து செயற்படுத்துவதாக இருந்தால் அதற்கு முன்னர் அதனைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டும்.

அதனால் சிலவற்றை நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். மேலதிகமாக நான் இந்த விடயத்தை முன்வைக்கிறேன். சிலவற்றுக்கு சட்டம் தேவை. சிலவற்றுக்கு அவசியமில்லை.அவை ஏற்கெனவே செயற்படுத்தப்படுகின்றன. ஓய்வூதியம் பெறுவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட கொடுப்பனவை ஒக்டோபர் மாதம் முதல் 3000 ரூபாவினால் அதிகரித்தோம். பொருளாதார நெருக்கடி நிலையுள்ள சூழலிலும் அவர்களுக்கு வாழ்வதற்கு கடினமான நிலை உள்ளது. அதனால் 3000 ரூபாவினால் அதிகரித்தோம். விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு 25 ஆயிரம் ரூபா வரை பசளை நிவாரணத்தை அதிகரித்தோம்.சில இடங்களில் இந்த பணம் கிடைப்பதில் தாமதம் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. நிதி அமைச்சுடன் பேசி எந்தத் தாமதமும் இன்றி அந்த நிவாரணத்தை விவசாயிகளுக்கு வழங்க திட்டம் தயாரித்துள்ளோம். இது தவிர விவசாயிகளுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

அடுத்து பொருளாதார நெருக்கடியினால் பாரிய தாக்கம் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக அனைத்து கணிப்புகளிலும் வெளியாகியுள்ளது. சிலர் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளனர். மேலதிக புத்தகங்கள் கொள்வனவு செயவதை நிறுத்தியுள்ளனர்.தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்தை நிறுத்தியுள்ளனர்.எந்த வகையிலும் இது உகந்த நிலைமையல்ல. வரவு செலவுத்திட்டத்தில் அவர்கள் குறித்து கவனம் செலுத்தும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க உள்ளதோடு இந்த வருட இறுதிக்குள் அஸ்வெசும பெறும் குடும்பங்களிலுள்ள பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 6000 ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அஸ்வெசும பயனாளர்கள் தெரிவு செய்கையில் சரியாக தெரிவு நடந்ததா என்ற கேள்வி கிராமங்களில் எழுப்பப்படுகிறது. அஸ்வெசும பெற தெரிவு செய்யப்படவோ பிள்ளைக்கு பாடசாலைக் கல்விக்கான கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்படவோ இல்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதனால் அஸ்வெசும திட்டத்துக்கு உள்வாங்கப்படாத ஆனால் நிவாரணம் வழங்கப்பட வேண்டிய பிள்ளைகளை தெரிவு செய்து அடுத்த பாடசாலை தவணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த 6000ரூபா கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அடுத்து விசேடமாக அஸ்வெசும 4 கட்டங்களாக செயற்படுத்தப்பட்டன. அதிலுள்ள 4 இலட்சக் குழுக்கள் இரண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அஸ்வெசும திட்டத்தில் இருந்து அகற்றப்படவுள்ளன. ஒரு குழு 4 இலட்சம்,மற்றொரு குழு 4 இலட்சம், அடுத்த குழு 8 இலட்சம் , அடுத்தது 4 இலட்சம் என 20 இலட்சம் பேர் குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர். அந்த குழுக்களில் இருந்த இரு 4 இலட்சம் பேர் கொண்ட குழுக்கள் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் அஸ்வெசும திட்டத்தில் இருந்து ஓரங்கட்டப்பட இருந்தன . அதில் கீழுள்ள குழுவை மார்ச் 31 வரை 3 மாதத்தினால் நீடித்துள்ளோம். இரண்டாவது குழுவை 2025 டிசம்பர் 31 வரை ஒருவருடத்தினால் நீடித்துள்ளோம். அதே போன்று அஸ்வெசும பெறுவோருக்கும் பெறாதோருக்கும் இடையில் கிராமங்களில் பிரச்சினை உள்ளது. இதனை மீளமைக்க வேண்டும். பழைய கட்டமைப்பின் கீழ் தான் முன்னர் மீளமைப்பு நடந்தது. அது வெற்றிகரமாக நடந்ததா என்பதை கிராமங்களில் உள்ளோர் அனுபவிக்கின்றனர்.அந்தக் கட்டமைப்பின் ஊடாகப் பெறும் தகவல்கள், கிராம சேவகரும் சமுர்த்தி உத்தியோகஸ்தரும் அபிவிருத்தி உத்தியோகஸ்தரும் சிலவேளை சமூக சேவை உத்தியோகஸ்தரின் ஒத்துழைப்புடன் மீள ஆராய்ந்து தற்பொழுது அஸ்வெசும கிடைக்காத ஆனால் நிவாரணம் கிடைக்க வேண்டியவர்களை மீண்டும் தெரிவு செய்து அடுத்த ஏப்ரல் மாதம் முதல் அவர்களுக்கு அஸ்வெசும வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அதே போன்று வங்கியூடாகத்தான் அஸ்வெசும வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. பொதுவாக வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்க அடையாள அட்டை அவசியம். அடையாள அட்டை பெற பிறப்புச் சான்றிதழ் வேண்டும். அஸ்வெசும கிடைக்க வேண்டிய குடும்பமாக அடையாளங் காணப்பட்டாலும் வங்கிக் கணக்கு ஆரம்பிக்க முடியாத காரணத்தினால் ஒன்றரை வருடங்களாக அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. 67 ஆயிரம் குடும்பங்கள் இதில் அடங்கும். அஸ்வெசும பெற தகுதி பெற்றும் ஆனால் அந்தப் பயனைப்பெற வங்கிக் கணக்குக் கணக்கு ஆரம்பிக்க அடையாள அட்டையோ அடையாள அட்டை பெற பிறப்புச்சான்றிதழோ பெற முடியாத நிலையை அந்தக் குடும்பங்கள் எதிர்கொண்டுள்ளன. ஆட்சியாளர்கள் மிக நெருக்கமாக அவதானித்து தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் அல்லவா இவை. ஆனால் ஒன்றரை வருடங்களாக கருத்திற் கொள்ளாமல் விட்டனர். மத்திய வங்கியுடன் கலந்துரையாடி அவர்களுக்கு அடையாள அட்டையின்றி வங்கிக் கணக்கு ஆரம்பிக்க அவகாசம் வழங்க நாம் முடிவு செய்துள்ளோம். அதனால் அந்த அனைவருக்கும் நிலுவைத் தொகையுடன் அந்த பயனை வழங்க நடவடிக்கை எடுப்போம். சில விடயங்களை வரவு செலவுத்திட்டத்துக்கு முன்னர் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். சிலவற்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். மார்ச் 21 ஆம் திகதியளவில் வரவு செலவுத்திட்ட விவாதம் நிறைவடையவிருக்கிறது. அதன் பின்னர் சட்டத்தை நிறைவேற்ற முயன்றால் இதனை ஏப்ரல் மாதம் வழங்க முடியாது போகும். இந்தப் பயன்களை துரிதமாக வழங்கும் தேவையிருந்தால் நாம் இதனை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். அதனால் தான் இவற்றை விரைவாக வர்த்தமானியில் வெளியிட்டு அடுத்த ஜனவரியில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் வற் வரி திருத்தம் உள்ளது. அஸ்வெசும சட்டத்தில் பல திருத்தங்கள் உள்ளன. திருத்தங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம்.



## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மார்கழி மாதம்**
**04ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்**
வாழ்க்கை முன்னேற்ற வேலைகளை இன்று ஆரம்பிப்பீர்கள். கணவன் மனைவி அந்நியோன்யமாக இருப்பார்கள்.

**ரிஷபம்**
பண வருவாய்க்கு குறை இருக்காது. எதையும் துணிவுடன் செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு.

**மிதுனம்**
குடும்பத்தில் சுப காரியங்களுக்காக செலவு செய்வீர்கள். மன மகிழ்ச்சி உண்டு. கல்வி இலாபம் உண்டு.

**கடகம்**
நல்ல உணவு, உறக்கம் அமையும். பரிசுப் பொருள்கள் கிடைக்கப் பெறுவீர்கள். பெரியோர் உதவி உண்டு.

**சிம்மம்**
ஆணவத்தால் பல தொல்லைகளை அனுபவிப்பீர்கள். பயணங்களின் போது கவனம் வேண்டும்.

**கன்னி**
பொருள் தன வரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் இலாபமும் உண்டு.

**துலாம்**
தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வியாபார விருத்தி உண்டு.

**விருச்சிகம்**
வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிரமங்கள் தோன்றும். கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

**தனுசு**
உடல் நோய்களால் சற்று சிரமப் படுவீர்கள். தன பொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டி வரும்.

**கும்பம்**
வாகனத்தால் அசௌகரியங்கள் ஏற்படும். மனைவியின் அன்புக்காக ஏங்குவீர்கள். கௌரவ குறைச்சல் ஏற்படும்.

**மகரம்**
பகைவர்கள் விலகிச் செல்வார்கள். கேட்ட பணம் இன்று கிடைக்கும். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**மீனம்**
போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாய்ப்பு உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சி. எதிரிகள் அடி பணிவார்கள்.

**திதி:**சதுர்த்தி மு.ப.10.03 வரை பின் பஞ்சமி
**நட்சத்திரம்:**ஆயிலியம் பி.இ.1.59 வரை பின் மகம்
**பிறை:**தேய்பிறை
**யோகம் :**அமிர்த யோகம் பி.இ.1.59 வரை பின் மரண யோகம்
**வார சூலை:**தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:**காலை- 9.16 – 12.16 மணி வரை மாலை- 4.16 – 6.16 மணிவரை
**ராகு காலம்:**1.46 – 3.16 மணிவரை
**எமகண்டம் :**6.16 - 7.46 மணிவரை
**குளிகை :**9.16 - 10.46 மணிவரை
**சந்திராஷ்டமம்:**தனுசு-மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் (பின்னிரவு1.59 வரை தனுசு ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 1.59 மணிவரை**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி
**இன்று பின்னிரவு 1.59 மணிக்குமேல்**
பரணி, கார்த்திகை, மிருகசீரிடம்,புனர்பூசம், ஆயிலியம்,பூரம்,உத்திரம், சித்திரை, விசாகம்,கேட்டை,பூராடம், உத்திராடம், அவிட்டம்,பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**

(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# இந்தியாவுடன் வலுசக்தி தொடர்பான எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்



''இந்தியாவுடன் வலுசக்தி தொடர்பான கலந்துரையாடல்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதே தவிர, அது தொடர்பில் அரசாங்கத்தினால் எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை'' என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (18) ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் எழுப்பிய கேள்விகள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

நளீன் பண்டார கேள்வியெழுப்பி உரையாற்றுகையில்,

''வெளிநாட்டு முதலீட்டின்போது இருதரப்பு உடன்படிக்கை அவசியமானது. ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தின்போது இந்திய வர்த்தகர்களை சந்தித்தார். இதேவேளை இதற்கு முன்னர் இந்தியாவுடன் நாங்கள் மேலும் உறவுகளை பேண வேண்டும் என்றும் எட்கா உடன்படிக்கையை செய்ய வேண்டும் என்றும் கூறினோம். இந்தியாவுடன் வலுச் சக்தியை இணைப்பது, எரிபொருள் குழாய் இணைப்பு, இந்திய ரூபாவை இலங்கையில் பயன்படுத்தல் மற்றும் கலாசார ரீதியில் நாங்கள் இந்தியாவுடன் இணைவது தொடர்பில் கூறும் போது இந்தியாவுடன் அரசியல் கலாசார ரீதியில் இணைந்தால் மற்றைய நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களை செய்ய முடியாது என்று நீங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் போது கூறினீர்கள்.

ஆனால் இம்முறை ஜனாதிபதி இந்தியாவுக்கு செல்லும் போது ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்ட மற்றும் இணங்கிய ஒப்பந்தங்களுக்கு நீங்கள் இறப்பர் முத்திரையை பொறித்து வந்துள்ளீர்கள். இந்நிலையில் இதற்கு முன்னர் இந்தியா மற்றும் எட்கா தொடர்பில் நீங்கள் கூறியவற்றை வாபஸ் பெற்றுக்கொள்வீர்களா என்று நான் கேட்கின்றேன். அத்துடன் அன்று குறித்த விடயங்கள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு யார் ஆணை வழங்கியது என்று இவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் போது கேள்வியெழுப்பினர். ஆனால் இப்போது இவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்தவற்றை முன்னால் கொண்டு செல்ல மக்கள் ஆணை வழங்கப்பட்டதா என்றும் கேட்கின்றேன்'' என்றார்.

இதன்போது பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறுகையில்,

''நளீன் பண்டார, வலுசக்தி தொடர்பில் கேள்வியெழுப்பியமை தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆணை கிடைத்திருக்கவில்லை. இந்நிலையில் அன்றும் நாங்கள் இலங்கையில் வலுசக்தியை உற்பத்தி செய்வோம் என்றும் மேலதிக வலுசக்தியை பொருளாதார ஒத்துழைப்புக்குள் வெளிநாட்டுக்கு அதனை விநியோகிப்போம் என்று கூறினோம். இது நாட்டுக்கே நன்மை தரும். இதன்படி நாங்கள் வலுசக்தியை உற்பத்தி செய்வோம். பிம்ஸ்டெக் பொருளாதார ஒத்துழைப்புடன் எமது மேலதிக வலுசக்தியை ஏற்றுமதி செய்து நாட்டுக்கு வருமானத்தை தேடுவோம். இதனை விடுத்து இந்தியாவுடன் நீங்கள் கூறுவதை போன்று வேறு எந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை. கூட்டு அறிவித்தல் மூலம் மிகவும் தெளிவாக வலுசக்தி தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றே கூறப்பட்டுள்ளது. இதனை விடுத்து நாட்டைக் காட்டிக்கொடுக்கும் எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை'' என்றார்.

# மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு வழங்கும் நிதி அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்கக்கூட போதாது

## மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாணக்கியன்



''மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு வழங்கும் நிதி அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குக் கூடபோதாது. இதன் காரணமாகவே மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை கோருகிறோம்'' என தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (18) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் மட்டக்களப்பில் பாலங்கள் நிர்மாணிப்பு தொடர்பில் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்னாயக்கவிடம் கேள்விகளை முன்வைத்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாலங்கள் அமைப்பது மாகாண சபைக்கு உட்பட்ட விடயம் என அமைச்சர் கூறுகின்றார். அப்படியானால் ஒருபோதும் மட்டக்களப்பில் பாலங்கள் நிர்மாணிக்கப்படமாட்டாது. ஏனெனில் மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு வழங்கும் நிதி அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குக் கூட போதாது. இதன் காரணமாகவே மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை நாம் கோருகிறோம்.

ஜனாதிபதியை அண்மையில் சந்தித்தபோது இவ்விடயம் பற்றி பேசினோம். பாலம் நிர்மாணிப்பு விடயதானத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கினால் இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்துக்குள் ஏதேனும் முன்னேற்றகரமாக நடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை மற்றும் எழுவான்கரை பிரதேசங்களை இணைக்கும் பிரதான பாலமான மண்டூர் - குருமண்வெளி பாலம் நிர்மாணம் மற்றும் மண்முனை தென்மேற்கு, மண்முனை தெற்கு எருவில்பற்று ஆகிய பிரதேசங்களை இணைக்கும் அம்பிளாந்துறை குருக்கள்மடம் பாலம் நிர்மாணம் வரை இப்பகுதியில் படகுச்சேவை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் படகுச் சேவைக்கு கட்டணம் அறவிடப்படுகிறது. வறுமை நிலையில் உள்ளவர்கள் தான் படகுச் சேவையை பயன்படுத்துகிறார்கள். ஆகவே படகுச் சேவையை இலவசமாக முன்னெடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் ஊடாக மாகாண சபைக்கு நிதி ஒதுக்க முடியுமா என்று கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவிடம் இதற்கான யோசனையை முன்வையுங்கள். உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நிதி நிலைமையை கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்றார்.

# மர்ஹூம் அஷ்ரப்பின் அடக்கஸ்தலத்துக்கு மு.கா.எம்.பிக்கள் விஜயம்





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் நினைவாக, கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் 10ஆவது பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்களான கட்சி செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், எம்.எஸ் உதுமாலெப்பை, எம்.எஸ்.நளீம் ஆகியோர் நேற்று (18) காலை சுபஹுத் தொழுகையின் பின்னர், ஜாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள அன்னாரின் அடக்கஸ்தலத்தின் அருகில் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

உயர்பீட உறுப்பினர் மௌலவி கலீல் மறைந்த தலைவர் அஷ்ரப்பின் ஆன்மீக ஈடேற்றத்துக்காகவும் சிறப்பான மறுமை வாழ்வுக்காகவும் துஆ பிரார்த்தனை நடத்தியதோடு நினைவுப் பேருரையும் நிகழ்த்தினார்.

# பேரவலத்தின் சாட்சியாக முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைக்கப்படவேண்டும்

## பாராளுமன்றில் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

**(விஜயரத்தினம் சரவணன்)**

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பேரவலத்தின் சாட்சியாக நினைவாலயம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் (17) சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

2024 நவம்பர் 27 நாளில் எமது மக்கள் தங்களின் உறவுகளுக்கு எதுவித இடர்பாடுமின்றி, அமைதியாக தமது அஞ்சலியைச் செலுத்தி தமது உணர்வலைகளை வெளிப்படுத்தி ஆறுதலடைந்தனர்.

அந்தவகையில், ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கைத் தீவில் காலாகாலமாக தொடர் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழர்கள், 2009இல் இடம்பெற்ற இறுதிப்போரில் வார்த்தைகளில் வடிக்க முடியாத துன்பத்தை அனுபவித்து இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இறுதிப்போரின் வலிகள் இன்னும் ஆறாத நிலையில் அப்போரில் தமது உறவுகளை இழந்த ஏராளமான மக்கள் இன்னும் தம் உணர்வுகளுடன் நடைபிணங்களாக வாழ்ந்துவருகின்றனர்.

தம்மை யாராவது காப்பாற்றமாட்டார்களா? என்ற ஏக்கத்தில் சின்னஞ்சிறியவர்கள் முதல், பெரியவர்கள் வரை ஏங்கித்தவித்த நிலை, "பசி, பசி" எனக் குழந்தைகள் அழும்போது செய்வதறியாத நிலையில் பெற்றோர்கள் கலங்கிய அவலநிலை, பதுங்கு குழிகளைவிட்டு வெளியேவந்தால் தப்பமுடியாது என்றெண்ணி பதுங்கு குழிகளுக்குள்ளேயே தங்கியிருந்த நேரம் அதற்குள்ளேயும் குண்டுகள் விழுந்து உறவுகள் மடிந்தபோது உயிரிழந்த தமது உறவுகளைப் புதைப்பதற்கு இயலாமல் உடலங்களை அவ்வாறே விட்டு ஓடிய நிலைமைகள் ஆகியவற்றை எண்ணிப்பாருங்கள்.

இலட்சக்கணக்கில் தமிழ் உறவுகளைப் பலிகொண்ட அந்தப் பேரவலம், தமிழ்த் தேசிய இனத்தின் கூட்டு மன உளவியலில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இந்த நிலையில் அங்கு உறவுகளை இழந்து, தற்போது வாழ்ந்து வருகின்ற மக்கள் தம் உறவுகளை நினைவுகூருவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நினைவிடம் தேவை என்பதை அங்குள்ள மக்கள் ஆதங்கத்துடன் கூறிவருகின்றனர்.



உயிரிழந்தோரை நினைவு கூரும் விதத்தில் உலகின் மூத்த குடிகளில் ஒன்றான தமிழ் இனம், மிக உயர் நாகரீக பண்பாடுகளைக் கொண்டுள்ளது. எம் இன வரலாற்றில் மிக அதிகமான மக்கள் உயிரிழந்த ஒரு அவலம். இவ்வாறு படுகொலைசெய்யப்பட்ட எம் உறவுகளை நினைவுகூர ஒரு நினைவாலயம் அமைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

ஆழிப்பேரலையினால் உயிரிழந்த மக்களுக்கென முல்லைத்தீவில் மட்டுமல்ல, பல இடங்களில் நினைவுமண்டபம் அமைக்கப்பட்டு அதில் உயிரிழந்த ஒவ்வொருவருடைய பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. இது காலாகாலத்துக்கும் உயிரிழந்தோரின் உறவுகளையும் சந்ததியினரையும் நினைவுகூர வழிசமைக்கின்றது.

அதேபோன்று முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவாகக் கட்டப்படும் ஆலயத்தில் உயிரிழந்தோரின் பெயர்கள் பொறிக்கப்படுவது தத்தமது உறவுகளை காலாகாலத்துக்கும் அவர்களின் சந்ததிகள் நினைவுகூர வசதியாக இருக்கும். எம் இனத்தின் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாக அமையும்.

அந்தவகையில், தேசிய பேரவலத்தின் சாட்சியாக நினைவாலயம் முள்ளிவாய்க்காலில் மே -18 நினைவுகூருமிடத்தில் அமைக்கப்படவேண்டும்.

இறந்தவர்களை நாங்கள் அடக்கம்செய்யும்போது கல்லறைகளை அதன்மேல் அமைக்கின்றோம். அந்தக்கல்லறைகளில் சம்பந்தப்பட்ட உறவுகள், நினைவுதினங்களில் பால்தெளித்து, படையல்களைப் படைத்து, பூக்கள் சொரிந்து, தீபங்கள் ஏற்றி தங்களுடைய மனக்கவலையை உள்ளத்திலிருந்து வெளிப்படுத்தி அழுது ஆற்றுகின்ற செயற்பாட்டுக்கு எமது மக்களையும் ஈடுபடுவதற்கு ஒரு நினைவாலயத்தை அமைப்பதற்கு எமது மக்களுக்கு அனுமதிதாருங்கள்.

இனப்பாகுபாடு பாராது, நாம் முள்ளிவாய்க்காலில் ஓர் நினைவாலயம் அமைப்பதற்கு அனுமதி தாருங்கள் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான முன்மொழிவு சமர்ப்பிப்பு

குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான முன்மொழிவுகளை உறுதியளிக்கப்பட்ட பதின்மூன்று நம்பகமான அமைப்புகளை உள்ளடக்கிய குழந்தை கொடுமையை நிறுத்து அறக்கட்டளை (SCCT) மற்றும் சிறுவர் பாதுகாப்புக் கூட்டணி (CPA) ஆகியவை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளன.

அநுரகுமார திசாநாயக்கவும் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை அரசாங்கமும் (GOSL) சிறுவர் நலனை தேசிய ஆளுகையின் இதயமாக உயர்த்தி புதிய விடியலைப் பெற்று, எதிர்காலத்தின் உண்மையான பயனாளிகளான எமது பிள்ளைகளுக்கு முதலில் கவனம் செலுத்துகின்றனர்.

இலங்கையின் சனத்தொகையில் 18 வயதுக்குட்பட்ட பிரஜைகள் 25% ஆக உள்ளனர் என்பதை 'குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பதற்கான சுருக்கமான முன்மொழிவு - ஒரு புதிய சகாப்தத்தின் உதயம்' எடுத்துக்காட்டுகிறது. 1991 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் உடன்படிக்கையை இலங்கை அங்கீகரித்த போதிலும்




சிறுவர் பாதுகாப்பு என்பது எமது சொர்க்கத் தீவில் தேசிய நெருக்கடியாக மாறியுள்ளது. குறுகிய கால (0 - 6 மாதங்கள்), நடுத்தர காலம் (6 மாதங்கள் - 2 ஆண்டுகள்) மற்றும் நீண்ட கால (2 - 4 ஆண்டுகள்) என GOSL கவனம் செலுத்த வேண்டிய நோக்கங்களை முன்மொழிவு வரையறுக்கிறது.

மேலும் விவரங்களுக்கு www.stopchildcruelty.com அல்லது மின்னஞ்சல் info@stopchildcruelty.com ஐப் பார்வையிடவும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (18.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 179.6182 | 188.9991 |
| கனேடியன் டொலர் | 199.1062 | 207.7215 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.5616 | 41.1222 |
| யூரோ | 299.3621 | 312.0177 |
| ஜப்பான் யென் | 1.8581 | 1.9333 |
| சிங்கப்பூர் டொலர் | 210.6326 | 220.4867 |
| ஸ்ரேலிங் பவுன் | 362.9276 | 376.9336 |
| சுவிஸ் பிராங்ங் | 318.2890 | 333.7971 |
| ஐ.அ. டொலர் | 286.8689 | 295.5003 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 771.3165 |
| குவைட் | குவைட் தினார் | 945.9330 |
| ஓமான் | ஓமான் ரியால் | 755.6899 |
| கட்டார் | கட்டார் ரியால் | 79.8081 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 77.4252 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.2106 |

# 77 நாடுகளில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கு இணைய வழியில் பிறப்பு சான்றிதழ் வழங்க நடவடிக்கை

## பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் விஜயசிங்க தெரிவிப்பு

(பு.கஜிந்தன்)

77 நாடுகளில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கு ஒன்லைன் மூலம் பிறப்புச் சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் விஜயசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டு பதிவாளர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சுடன் இணைந்து இலங்கைக்கு வெளியே வசிக்கின்ற 77 நாடுகளில் வசிக்கின்ற பிரதிகள் தங்களுடைய பிறப்புச் சான்றிதழ்களை ஆன்லைன் மூலம் பெற முடியும். நாங்கள் இரு வாரங்களுக்கு முன்பாக 7 நாடுகளோடு இணைந்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினோம்.அது சாத்தியமாக அமைந்துள்ளது. வெளிநாட்டில் இருப்பவர்களும் எங்களுடைய பிரஜைகள் என்ற அடிப்படையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பதிவாளர் திணைக்களத்தின் பணிகள் பரந்துபட்டது. யாழ்ப்பாணத்தில் பெண் பதிவாளர்கள் அதிகமாக இருப்பதால் எமக்கு வேலை செய்வது இலகுவாக அமைந்துள்ளது. பிறப்பு, இறப்பு மற்றும் திருமண விடயங்களில் பெண்களின் கவனம் அதிகமாக இருக்கும். மக்களினுடையை சேவையை மேம்படுத்தி நடக்கவேண்டும்.

தெற்கிலிருந்து வடக்குக்கு வருவது என்பது ஒரு முக்கியமான விடயமாகும். நாட்டை அழகுபடுத்துவதற்காக பதிவாளர்கள் நீங்கள் அனைவரும் பணிபுரிகின்றீர்கள். சேவைகளை வழங்குவதும் பெற்றுக் கொள்வதும் எங்களது





நோக்கமாக இருக்கின்றது. அதன் மூலம்தான் தனிநபர், சமூகம் நாடு எல்லாம் எழுந்துள்ளது. நாங்கள் விருத்தி செய்ய தவறுவோமானால் பிறரும் பாதிக்கப்படுவர். எம்மை நாம் பார்க்காத பொழுது எங்களுடைய குடும்பம் பாதிகப்படுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது. தொடர்ந்து சமூகம் நாடு பாதிப்படையும்.

எங்களுடைய திணைக்களத்துக்கு உங்களுடைய அளப்பரிய பணி அவசியமானது. திணைக்களத்துக்கான உத்தியோகபூர்வ தொடர்பு உங்கள் மூலம் ஏற்படுகின்றது. மாவட்டத்தினுடைய அரசாங்க அதிபர் மேலதிக பதிவாளராக இருக்கின்றார்.

பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச பதிவாளர்களாக செயற்படுவர். பதிவாளர் திணைக்களம் சமூக சேவை வழங்குவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு நடைமுறையாகும்.

பதிவாளர்கள் இணைந்திருப்பது பொது மக்களுக்கு சேவையை வழங்குவதற்காகவே. ஆகவே நீங்கள் ஒரு பொறுப்பு வாய்ந்த பணியிலே இருக்கின்றீர்கள். அடிப்படையான ஆவணங்களை தயாரிப்பது நீங்கள் தான். மரணச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் ஏனைய மாவட்டங்களில் பதிவுகளின் பொழுது திருத்தங்கள் இருந்தால் தொலைபேசி மூலமாக அறிவிக்கப்படும். ஆனால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து கிடைக்கப்பெறுகின்ற ஆவணங்கள் மிகவும் தெளிவாக அமைந்திருக்கும்.

மற்றவர்களுடைய துன்பங்கள் இன்பங்களை நாங்கள் சரியாக அறிந்துகொள்ள வேண்டும். பிறப்பின் பொழுது தாயையும் திருமணத்தின் பொழுது மணமக்களையும் இறப்பின் பொழுது உறவுகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

பதிவாளர் திணைக்களத்தின் வயது 160ஐ தாண்டுகின்றது. ஆவணங்களை நாம் பாதுகாக்க தவறினால் வெளியில் இருப்பவர்கள் எவ்வாறு பாதுகாப்பார்கள். எங்களுடைய திணைகளத்துக்கு நல்ல பெயர் உண்டு. நாங்கள் அந்த பெயரை தொடர்ந்தும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். திணைக்களத்துக்கு நல்ல பெயரை பெற்றுக்கொள்வது இலகுவானது.

டிஜிட்டல் மயப்படுத்தலை மேற்கொள்வதற்கு முன்பாக குறித்த ஆவணம் சரியான முறையில் எழுதப்பட்டு இருக்கின்றதா என்பது தொடர்பில் நாம் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். பிறப்பு, இறப்பு, விவாகரத்து தொடர்பாக டிஜிட்டல் வடிவங்களில் வழங்குவதற்கு நாங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். 2005 இலிருந்து அதனை தொடங்கினாலும் 19 வருடங்கள் கடந்துள்ளன.

அடையாள அட்டை எம்மை அடையாளப்படுத்துவதற்கு மூல ஆவணமாக இருந்தாலும் அதனை வழங்குவதற்கு பிரதான சான்றாக பிறப்பு சான்றிதழ் காணப்படுகின்றன. இதன் மூலம் நாட்டில் உள்ள அனைத்து ஆவணங்களும் ஒன்றிணைக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் அடையாள அட்டை பணிகளை விநியோகிக்கின்ற பொழுது ஆட்பதிவு திணைக்களம் மற்றும் பதிவார் திணைக்களம் இணைந்து செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இலங்கையில் காணாமல்போனவர் தொடர்பாக பதிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. காணிப்பதிவுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நாட்டுக்குத் தேவையான ஆவணங்களை நாங்கள் வழங்க வேண்டியிருக்கின்றது. அந்த ஆவணங்கள் நாட்டுக்குத் தேவையாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமந்த வித்யாரத்னவை சந்தித்த ரத்துகலை பழங்குடித் தலைவர்



பத்தரமுல்லையில் அமைந்துள்ள பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சகத்தில் கடந்த 16ஆம் திகதி ரத்துகலை பழங்குடித் தலைவர் அமைச்சர் சமந்த வித்யாரத்னவை சந்தித்தார்.

இதன்போது பிபிலை மற்றும் அம்பாறை பிரதேசங்களுக்கு இடையே அமைந்துள்ள ரத்துகலை பழங்குடி கிராமத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ரத்துகலை பழங்குடி தலைவர் அமைச்சரிடம் தெளிவு படுத்தினார்.


இதில், நீண்ட காலமாக தீர்வு காணப்படாத இந்த பிரச்சினைகளுக்கு விரைவான மற்றும் நியாயமான தீர்வுகளை எதிர்பார்ப்பதாக ரத்துகலை பழங்குடித் தலைவர் வலியுறுத்தினார்.

குறிப்பாக, ரத்துகலை கிராம மக்கள் எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கிராமத்தில் நிலவும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## இதுவரை 47 ஆயிரத்து 600 நோயாளர்கள் பதிவு



Current Status of Dengue 2024 As of 17.12.2024 midnight

| Total | 47599 |
|---|---|
| 2024 | |
| December | 2072 |
| November | 3179 |
| October | 2938 |
| September | 2768 |
| August | 3897 |
| July | 4506 |
| June | 3319 |
| May | 2647 |
| April | 2234 |
| March | 3613 |
| February | 6007 |
| January | 10417 |
| Dengue Deaths in 2024 | 23 |
| Case Fatality Rate | 0.05% |

| District | No of Cases | | Province | No of Cases | |
|---|---|---|---|---|---|
| Colombo | 12030 | (25.3%) | Western | 20519 | (43.1%) |
| Gampaha | 5900 | (12.4%) | | | |
| Kalutara | 2589 | (5.4%) | | | |
| Jaffna | 4411 | (9.3%) | Northern | 5168 | (10.9%) |
| Kandy | 4099 | (8.6%) | Central | 5099 | (10.7%) |
| Kurunegala | 1788 | (3.8%) | North Western | 3029 | (6.4%) |
| Puttalam | 1241 | (2.6%) | | | |
| Galle | 2170 | (4.6%) | Southern | 3705 | (7.8%) |
| Kegalle | 1746 | (3.7%) | Sabaragamuwa | 4707 | (9.9%) |
| Ratnapura | 2961 | (6.2%) | | | |
| Batticaloa | 1488 | (3.1%) | Eastern | 2978 | (6.3%) |

| High-risk MOH Areas [week 49, 2024] | 13 |
|---|---|
| Average Mid-night Total [Week 49, 2024] | 267 |

Source: NaDSys surveillance

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில், தொடர்ந்து பெய்த மழையுடனான காலநிலையும் இதற்கு காரணமென தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரையான காலப்பகுதி வரை 47 ஆயிரத்து 599 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 20 ஆயிரத்து 519 நோயாளர்கள் பதிவாகியுள்ளது. இதற்கிணங்க 43 சதவீதமான டெங்கு நோயாளர்கள் இம்மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

மேலும், வடமாகாணத்தில் 5,168 நோயாளர்களும் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் 4411 நோயாளர்களும் மத்திய மாகாணத்தில் 5099 நோயாளர்களில் கண்டி மாவட்டத்தில் 4,099 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

மேலும் சப்ரகமுவ மாகாணத்தில் 4707 டெங்கு நோயாளர்களும் கேகாலை மாவட்டத்தில் 1746 பேரும் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் 2961 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. வட மேல் மாகாணத்தில் 3029 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், குருணாகல் மாவட்டத்தில் 1788 பேரும் புத்தளம் மாவட்டத்தில் 1241 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தென் மாகாணத்தில் 3705 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், காலி மாவட்டத்தில் 2170 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 2978 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1488 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 23 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளை உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி

(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை உதைபந்தாட்டச் சங்கம் “தலைவர் வெற்றிக்கிண்ணத்துக்காக” நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை மறுதினம் 21ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பேருவளை கிரேட் ஸ்டார் உதைபந்தாட்ட கழகமும் தர்கா நகர் ரெட் ஸ்டார் உதைபந்தாட்டக் கழகமும் இறுதிப் போட்டியில் மோத உள்ளதாக சங்கச் செயலாளர் எம்.எஸ்.எம்.சீனான் தெரிவித்தார்.

பேருவளை உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட 20 விளையாட்டுக் கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில் பங்கு பற்றியதுடன் இறுதிப் போட்டிக்கு மேற்படி இரு அணிகளும் தெரிவாகின.

தலைவர் வெற்றி கிண்ணத்துக்காக நடத்தப்படும் சுற்று போட்டிக்கான முழுச் செலவையும் பேருவளை உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ரிஸ்வான் பொறுப்பேற்றுள்ளார்.

பேருவளை, மஹகொட ஐ.எல்.எம்.சம்சுதீன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தலைவர் கிண்ண அறிமுக நிகழ்வில் அவர் 10 இலட்சம் ரூபாய் அன்பளிப்புச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

21ஆம் திகதி மாலை நடைபெறும் பரிசளிப்பு விழாவுக்கு தலைவர் எம்.எஸ்.எம் ரிஸ்வநாதியார் தலைமை வகிப்பார்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் எம்.ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாகவும் உப தலைவரும் களுத்துறை உதைபந்தாட்ட சங்கத் தலைவருமான டொக்டர் மனில் பெர்னாண்டோ கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வர்.

பேருவளை உதைபந்தாட்ட சங்க உறுப்பினர்கள், இதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 20 கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள் , உறுப்பினர்கள்,பிரமுகர்கள் மற்றும் ரசிகர்கள் என பலரும் கலந்துகொள்வர்.

இதற்கான பரவலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செயலாளர் எம்.எஸ்.எம்.சீனான் குறிப்பிட்டார்.



# திண்மக்கழிவகற்றும் விசேட வேலைத்திட்டம் முன்னெடுப்பு



(மீராவோடை செய்தியாளர்)

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதியில் திண்மக்கழிவுகளை அகற்றும் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக குறித்த பகுதியில் திண்மக்கழிவுகளை அகற்ற பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டிருந்தன. இதனைக் கருத்திற்கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீமின் முயற்சியில் அனர்த்த மீட்பு இயந்திரம் மற்றும் ஆளணியினர்களைக் கொண்டு பொது இடங்களில் காணப்படும் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டன.

அந்தவகையில்,வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் காணப்பட்ட திண்மக்கழிவுகள் நேற்று (18) வாழைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.ஏ.கபூரின் ஏற்பாட்டில் அகற்றப்பட்டன. இந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டமைக்கு பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் நன்றி தெரிவித்துள்ளார்.

# வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிக்க 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கப்படும்

## நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க

மண்டூர் - குருமண்வெளி பாலத்தை நிர்மாணிப்பதற்கும் அம்பிளாந்துறை - குருக்கள்மடம் பாலத்தை அமைக்கவும் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

''மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை மற்றும் எழுவான்கரை பிரதேசங்களை இணைக்கும் பிரதான பாலமான மண்டூர் - குருமண்வெளி பாலம் நிர்மாணிப்பு மற்றும் மண்முனை தென்மேற்கு, மண்முனை தெற்கு, எருவில்பற்று ஆகிய பிரதேசங்களை இணைக்கும் அம்பிளாந்துறை - குருக்கள்மடம் பாலம் நிர்மாணிப்பு தொடர்பில் சாணக்கியன் எம்.பி. முன்வைத்துள்ள கேள்விகள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் விடயதானங்களுக்கு உட்பட்டதல்ல. கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. ஆனாலும் சாணக்கியன் எம்.பி. மக்களின் பிரச்சினைகள் பற்றி கேள்வியெழுப்பியுள்ளார்.

ஆகவே, விடயதானத்துக்கு அப்பாற்பட்டாலும் பதிலளிக்க விரும்புகிறேன். மண்டூர் - குருமண்வெளி பாலத்தை நிர்மாணிப்பதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், போக்குவரத்துக்காக படகுச்சேவை முன்னெடுக்கப்படுகிறது. பாலத்தை நிர்மாணிப்பதற்கு 09 பில்லியன் ரூபா செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அம்பிளாந்துறை - குருக்கள்மடம் பாலம் 900 மீற்றர் தூரத்தைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு 10 பில்லியன் ரூபா செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விடயதானத்துக்குள் உள்ளடங்காது.

கோறளைப்பற்று - தெற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள திகிலிவெட்டை - சந்திவெளி பாலம் மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள புன்னக்குடா - களுவன்கேணி பாலம் 250 கிலோமீற்றர் தூரத்தை உடையது. இந்தப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு 02 பில்லியன் ரூபா செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஜெய்க்கா நிறுவனம் மட்டக்களப்பு பகுதியில் களப்பு ஊடாக பாலமொன்றை நிர்மாணிப்பதற்கு கருத்திட்ட யோசனையொன்றை முன்வைத்துள்ளது. இந்தக் கருத்திட்ட வரைபில் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது இவ்விடயம் பற்றிப் பேசியுள்ளீர்கள். முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கப்படும்'' - என்றார்.



அரச ஓவிய மற்றும் சிற்ப விழா – 2024 விருது வழங்கும் நிகழ்வு புத்தசாசன மற்றும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையில் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதன்போது அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஓவியர் அம்ஜாத் அஹமது தரைக்காட்சி(Landscape) பிரிவில் தேசிய ரீதியில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்டதோடு விருது மற்றும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார். அவருடைய மற்றுமொரு ஓவியமானது (creative painting) இறுதிச் சுற்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (திராய்க்கேணி செய்தியாளர்)



கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கு பொறுப்பான பிரதம ஆணையாளர் திருமதி பீ.ஜீ.ஐ.களனி ஹேமாலி மற்றும் கல்வியியல் கல்லூரியின் பிரதி பணிப்பாளர் திருமதி எம். சுமந்தகுமாரி ஆகிய குழுவினர் உத்தியோகபூர்வமான மேற்பார்வையின் பொருட்டு நேற்று புதன்கிழமை(18) அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர். இதன்போது ஆசிரியர் பயலுனர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கும் தேவையான ஆலோசனை வழங்கியதுடன் கல்வியியல் கல்லூரியின் எதிர்கால விருத்திக்காக தனது முழுமையான பங்களிப்பையும் வழங்குவதாக உறுதியளித்தார். இந்நிகழ்வின்போது கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி உட்பட உப பீடாதிபதிகள், விரிவுரை இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அட்டாளைச்சேனை செய்தியாளர்)



அம்பாறை மாவட்டத்தில் 34ஆவது தேசிய மத்தியஸ்த தின நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை(16) நடைபெற்றது. இதன்போது கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மத்தியஸ்த சபையில் கடமையாற்றியவர்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (பாறுக் ஷிஹான்)







மட்டக்களப்பு மாவட்ட செயலக ஒளிவிழா நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை(17) புதிய மாவட்ட செயலகத்தில் நடைபெற்றன. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷனி ஸ்ரீகாந்த் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜஸ்டினா முரளிதரன் கலந்துகொண்டிருந்தார். இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சனி முகுந்தன், பனிச்சையடி அனைத்துலக அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி வின்சேஸ்லஸ், திராய்மடு மெதடிஸ்த தேவாலயத்தின் அருட்பணியாளர் சுதாகரன், திராய்மடு சிமர்னா தேவாலயத்தின் சிரேஷ்ட போதகர் எஸ்.வசந்தகுமார் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டிருந்தனர். (மட்டக்களப்பு)



குறைந்த வசதிகளையுடைய மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலின் கீழ் பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை(17) இடம்பெற்றது. ARAM (Viborg, Denmark) அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் கே. தில்லைநாதனின் ஏற்பாட்டில் கனடா நாட்டில் வசிக்கும் யாதவன் என்பவரின் நிதி அனுசரணையில் மேற்படி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு, மகளிர் அபிவிருத்தி, சிறுவர் பாதுகாப்பு, மத்தியஸ்த அபிவிருத்தி போன்ற பிரிவுகளின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டு பிள்ளைகளுக்கான பொருட்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (மத்தியமுகாம் செய்தியாளர்)





மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் இ.முரளீஸ்வரனின் எண்ணக்கருவில் உருவான 'உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம்' எனும் தொனிப்பொருளில் இரத்ததான நிகழ்வு கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் நேற்று(18) இடம்பெற்றது. வைத்திய அதிகாரியான சி.சிவலக்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிரான் பிரதேச செயலாளர் கே.சித்திரவேல் உட்பட உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர். (வாழைச்சேனை செய்தியாளர்)



# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் கட்டிடவசதி இன்மையால் வைத்திய உபகரணங்கள் கிடப்பில்

## வளங்களை வழங்குகின்ற விடயத்திலும் பாரபட்சம்

## கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**(அட்டப்பள்ளம் செய்தியாளர்)**

''நூறு வருடங்களுக்கு மேல் பழைமையான அம்பாறை திருக்கோயில் ஆதார வைத்தியசாலையில் வைத்திய உபகரணங்கள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்த உரிய கட்டிட வசதிகள் பெற்றுத் தருவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது'' - என்று கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறை நிரப்பு பிரேரணையில் 05 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்கின்ற நடவடிக்கை சம்பந்தமாகத் தீர்மானம் எடுப்பதற்கான அமர்வு செவ்வாய்க்கிழமை(17) பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இங்கு எம்.பி. மேலும் உரையாற்றுகையில்,

''திருக்கோவில் ஆதார வைத்தியசாலை, கிட்டத்தட்ட நூறு வருடங்களுக்கும் மேல் பழைமையான ஓர் ஆதார வைத்தியசாலையாகும். இந்த வைத்தியசாலைக்கு இருக்கவேண்டிய ஆளணி என்பது இல்லாமல் இருக்கின்றது. அதுமட்டுமல்ல, கிட்டத்தட்ட 26 வைத்தியர்களைக் கொண்டிருக்க வேண்டிய வைத்தியசாலையில் தற்போது ஐந்து வைத்தியர்கள்தான் இருக்கின்றார்கள். ஐந்துக்கும் மேற்பட்ட வைத்திய நிபுணர்களைக் கொண்டிருக்கவேண்டிய வைத்தியசாலைக்கு ஒரு வைத்திய நிபுணர் கூட இல்லாத நிலை காணப்படுகின்றது.

அங்கே கோடிக்கணக்கில் பெறுமதியான சத்திர சிகிச்சை கூடத்துக்குரிய வைத்திய உபகரணங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கு கட்டிடங்கள் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலை நிலவுகின்றது. கோடிக்கணக்கான வைத்திய உபகரணங்கள் வைத்தியசாலையிலேயே முடக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. சுகாதார அமைச்சர் இவ்வைத்தியசாலையின் நிலைமையை நேரடியாகச் சென்று பார்க்க வேண்டும். உங்களுடைய அதிகாரிகளை அந்த இடத்துக்கு அனுப்பி இதற்குத் தீர்வு பெற்றுத்தர வேண்டும்.

அது மட்டுமல்ல, பொது வைத்திய நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர்கள் அங்கு இருக்க வேண்டும். ஆனால், ஒருவர் கூட அங்கு இல்லை. கிட்டத்தட்ட 57 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை இங்கு காணப்படுகின்றது. கூடுதலான உயிரிழப்பு இப்பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கின்றமை கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. அங்கு சத்திர சிகிச்சைக்கூடம், பிசியோதெரபி பிரிவு, இரத்த வங்கிப் பிரிவு, இரத்தமாற்று சத்திர சிகிச்சைப் பிரிவு போன்றவற்றை செயற்படுத்தக்கூடிய உபகரணங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கு கட்டிடங்கள் இல்லை. கட்டிடங்கள் அமைப்பதற்கு பெரிய தொகை இங்கு தேவைப்படுவதில்லை.



உண்மையாக ஒரு 05 மில்லியனுக்குள் கூட அந்தக் கட்டிடங்களைக் கட்டி முடிக்க முடியும். ஆனால், வளங்கள் வழங்குகின்ற விடயத்தில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. ஆகவே, சுகாதார அமைச்சர் இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, அந்த இடத்துக்கு விஜயம் செய்ய வேண்டும். ஏனென்றால், எங்களது ஜனாதிபதி இது விடயமாக இரண்டு கிழமைக்கு முதல் கலந்துரையாடியபோது, நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி தந்திருக்கின்றார். உங்களோடு கதைத்து நீங்கள் அதைப் பார்வையிடுவதாகவும் அவர் எங்களுக்கு உறுதி மொழி வழங்கிருக்கின்றார். எனவே, நீங்கள் இது விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

மேலும், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திலே கிட்டத்தட்ட 25 வருட காலமாக அபிவிருத்திக் குழுத் தலைவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், இன்று இந்த ஆட்சி வந்த பின்பு, குறித்த அபிவிருத்திக் குழுத் தலைவர் நியமிக்கப்படவில்லை. அம்பாறை மாவட்டத்திலே 20 பிரதேச செயலகங்கள் இருக்கின்றன. அதிலே கல்முனை வடக்கு பிரதேச செயலகமும் ஒன்றாக இருக்கின்றது. ஆனால், இற்றைவரையிலே அங்கு அபிவிருத்திக் குழு தலைவர் நியமிக்கப்படவில்லை. இதனை அந்த மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவே நான் பார்க்கின்றேன்.

மேலும், இந்தக் குறைநிரப்புப் பிரேரனையில் 05 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்கின்ற நடவடிக்கை சம்பந்தமாகத் தீர்மானம் எடுப்பதற்கான ஒரு கலந்துரையாடலிலே, விசேடமாக கல்வி ரீதியான விடயங்களிலே முன்னெடுப்பை மேற்கொள்கின்றபோது, கூடுதலாக கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கான நிதியொதுக்கீடு கட்டாயமாக செய்யப்பட வேண்டும். பாடசாலைகளுக்கான நிதி பாரபட்சமின்றி ஒதுக்கப்பட வேண்டும். கடந்த காலங்களிலே அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது மிகக் குறைவாக இருந்தது. தற்போதும் அம்பாறை மாவட்டத்தில் அனர்த்தத்தினாலே பல பாடசாலைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகின. இந்தப் பாடசாலைகளுக்கு செல்கின்ற வீதிகள் கூட சேதமடைந்த நிலையிலே காணப்படுகின்றன. இதனால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல், அந்தப் பாடசாலைகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் கூட இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. ஆனால், போக்குவரத்துச் சபை அப்பகுதிகளுக்கு போக்குவரத்து சேவையை வழங்காதிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்திலுள்ள அழிக்கம்பை பிரதேசத்திலுள்ள பாடசாலை அதி கஷ்ட பிரதேச பாடசாலையாகும். அந்தப் பாடசாலைக்குச் செல்கின்ற வீதிகள் சேதமடைந்த நிலையில் இருக்கின்றன. அதேபோல், மணற்சேனையில் இருக்கின்ற பாடசாலையும் அதிகஷ்டப் பிரதேச பாடசாலையாகும். அதேபோல், தங்கவேலாயுதபுரத்தில் உள்ள பாடசாலை இந்தப் பாடசாலைகளுக்கு செல்கின்ற வீதியானது மிகவும் சேதமடைந்த நிலையிலே இருக்கின்றது. இவ்வீதியால் யாரும் பயணிக்க முடியாத அவல நிலை தொடர்கின்றது.

எனவே குறித்த பாதைகளைச் சீர்செய்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி குறித்த பாடசாலைகளின் புனரமைப்பு பணிகளை முன்னெடுத்து மாணவர் களுடைய கல்வி மேம்பாட்டுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த இடத்திலேயே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், பாடசாலைகளுக்கான உபகரணங்கள், சீருடைகள் வழங்கப்படுகின்றபோது பாரபட்சம் காட்டாது அனைத்து மாணவர்களுக்கும் சீருடை, பாடசாலை உபகரணங்களை வழங்க வேண்டும். ஏனெனில், நீங்கள் தனிப்பட்ட ஒருவருக்கு இதனை வழங்குகின்ற போது, இரண்டு பிரிவினர்களுக்கிடையே பாரபட்சம் காட்டப்படுகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் - என்றார்.

# மட்டக்களப்பு புதிய செயலகக் கட்டிடத் தொகுதியின் தொழில்நுட்பக் கட்டமைப்பு

## பார்வையிட்டார் அரச அதிபர்



**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்ட செயலகக் கட்டிடத் தொகுதியில் சகல திணைக்களங்களின் பணிகளும் செயற்படத் தொடங்கியுள்ள நிலையில், அவற்றை இணைக்கும் தொழில்நுட்பக் கட்டமைப்பை மாவட்ட செயலாளர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் செவ்வாய்க்கிழமை(17) பார்வையிட்டார்.

மாவட்ட செயலகத்தின் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகத்தர்களினால் தொழில்நுட்பக் கட்டமைப்பு அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், அங்குள்ள தொழில்நுட்பக் கட்டமைப்பின் செயற்பாடுகள் மற்றும் அவை எவ்வாறு ஒவ்வொரு திணைக்களத்துடனும் தொழில்நுட்ப வசதிகளுக்காக இணைக்கப்பட்டுள்ளன போன்ற விடயங்கள் தொடர்பாக மாவட்ட செயலாளருக்கு தெளிவுபடுத்தப்பட்டன.

மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் இயங்கி வந்த மாவட்ட செயலகம் மற்றும் அங்கிருந்த பல்வேறு அரச திணைக்களங்கள் திராய்மடு பிரதேசத்திலுள்ள புதிய கட்டிடத் தொகுதியில் கடந்த ஜூன் 22ஆம் திகதியில் இருந்து கட்டம் கட்டமாக சகல திணைக்களங்களும் உத்தியோகபூர்வமாக செயற்பட ஆரம்பித்துள்ளன.

அத்துடன், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் காணிப் பிரிவு மற்றும் அதனுடன் இணைந்த பிரிவுகள் தற்போதும் ஒல்லாந்தர் கோட்டையில் இயங்கி வருவதுடன் விரைவில் புதிய செயலகக் கட்டிடத் தொகுதியில் தமது பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையின் தேவைகள் நிறைவேற்றப்படாமைக்கு பிரதேச அரசியல்வாதிகளின் தூரநோக்கற்ற செயற்பாடுகளே காரணம்

## பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா சாடல்



**(அட்டப்பள்ளம் செய்தியாளர்)**

''மக்களின் எதிர்பார்ப்பு, கல்முனை பிரதேசத்தின் தேவைகள் என்பன மிகவும் நீண்டகாலமாக பூரணமாக நிறைவேற்றப்படாமை பிரதேச அரசியல்வாதிகளின் தூர நோக்கற்ற செயற்பாடுகளின் விளைவாகும்'' - என தேசிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஏ.ஆதம்பாவா தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து நேற்று புதன்கிழமை(18) ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்து உரையாற்றிய அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

''அரசியல்வாதிகளின் தூரநோக்கற்ற செயற்பாடுகளின் காரணமாகவே ஒலுவில் துறைமுகம் சாத்தியமற்றுப்போனது. கிழக்கின் வர்த்தக கேந்திர நிலையமாக விளங்கிய கல்முனை மாநகரம் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுகிறது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல்வேறு உயிரிழப்புகள், உடைமை இழப்புகளை மக்கள் சந்தித்துள்ளார்கள். இதற்கான முறையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக அரசியல்வாதிகள் பல்வேறு மாயைகளை அரசியல் அரங்கிலே கொண்டு வந்து, அதனூடாக மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வருகின்றபோதிலும், மக்களை ஏமாற்றுகின்ற நிலைமை தொடர்கதையாகவேயுள்ளது. இந்நிலை மாற்றப்பட வேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள்.

அரசியல்வாதிகள் மீது மக்கள் கொண்ட அதிருப்தி காரணமாகவே தேசிய மக்கள் சக்தியில் பெரும்பாலான இலங்கை மக்கள் இன்று ஒன்று திரண்டுள்ளனர். இந்த மக்களுடைய முழு எதிர்பார்ப்பையும் எதிர்காலங்களிலே நிறைவேற்றுவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு தேசத்து மக்கள் என்கிற உணர்வோடு, எதிர்காலத்திலே செயற்படுவதற்கான அத்தனை வேலைத்திட்டங்களும் தேசிய மக்கள் சக்தி ஊடாக நிறைவேற்றப்படும். அதற்காக எனக்கு கிடைத்த அமானிதத்தை மிகச் சிறப்பாக நான் பயன்படுத்துவேன். அம்பாறை மாவட்ட மக்களினுடைய உட்கட்டுமான தேவைகள், கிடப்பிலுள்ள பல்வேறு வேலைத்திட்டங்களை இயலுமானவரை நிறைவேற்ற வேண்டும். அதற்கான சகல ஏற்பாடுகளையும் நான் எமது அரசாங்க துறைசார் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி செயற்படுத்த முயற்சிப்பேன்.

நாம் சுமந்திருக்கின்ற அமானிதம் மக்களின் சேவைக்காக பூரணமாகப் பயன்படுத்தப்படும். அதேபோன்று, முன்சென்ற அரசாங்கங்களுக்கு இருந்தது போன்று பல்வேறு சவால்கள் இக்கால கட்டத்தில் எமக்கும் இருக்கின்றது. அதனை சர்வதேச உறவு, நிதி திரட்டல்கள் மற்றும் செயற்றிட்டங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தி அதனூடாக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கேற்ற வேலைத்திட்டங்களை எதிர்வரும் காலங்களிலே எமது அரசாங்கம் நிச்சயமாக முன்னெடுக்கும்'' - என்றார்.

# கிண்ணியா கல்வி வலயத்தில் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் பற்றாக்குறை

## நிவர்த்திக்குமாறு இம்ரான் எம்.பி. ஆளுநரிடம் கோரிக்கை

**(கிண்ணியா செய்தியாளர்)**

கிண்ணியா கல்வி வலயத்தில் நிலவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தினசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆளுநருக்கு செவ்வாய்க் கிழமை(17) சமர்ப்பித்துள்ள கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, கிண்ணியா கல்வி வலயம் 68 பாடசாலைகளையும் சுமார் 24 ஆயிரம் மாணவர்களையும் கொண்டது. இங்கு அனுமதிக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆளணி 20 ஆகும். ஆனால், தற்போது 03 இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் கள் மட்டுமே கடமை புரிகின்றனர். இதனால் கிண்ணியாவின் கல்வி நிர்வாகம் மிகவும் பின்னடைந்து காணப்படுகின்றது.



இது மாணவர்களின் கற்றலில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. கிழக்கு மாகாணத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு பற்றாக்குறை இருந்தாலும் சில வலயங்களில் 10 பேர் வரை பணிபுரிகின்றனர். மாகாணத்தில் இருக்கின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சரியாகப் பகிரப்படாமையே இதற்குக் காரணமாகும். இதனால் கிண்ணியா வலயம் மாகாணக் கல்விப் பகுதியினரால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதான குற்றச்சாட்டுகளும் உள்ளன.

எனவே, தயவு செய்து இவ்விடயங்களைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாணத்தில் கடமையிலிருக்கின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளை சரியாகப் பங்கீடு செய்து கிண்ணியா வலய இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





கிழக்கு மாகாணத்துக்குட்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவை செவ்வாய்க்கிழமை (17) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போது, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். கல்வி நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதில் கிழக்கு மாகாணம் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதோடு, அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (சீனக்குடா செய்தியாளர்)

# சிறுவர் பேரவையின் உறுப்பினர்களுக்கான வதிவிட திறன் பயிற்சி செயலமர்வு





**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் பேரவையின் உறுப்பினர்களுக்கான வதிவிட திறன் பயிற்சி செயலமர்வின் ஆரம்ப நிகழ்வு செவ்வாய்க்கிழமை (17) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிறுவர்கள் அவர்களது உரிமைகளை அறிந்து கொண்டு அவர்களே அவர்களை உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் வலுப்படுத்தும் நோக்கில் தன்னாமுனை மியாமி மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மூன்று நாள் செயலமர்வின் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மாவட்ட செயலாளர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஜீ.பிரணவனின் தலைமையில் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் தி.மதிராஜின் ஏற்பாட்டில் இடம்பெற்ற செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமிருந்து சிறுவர் சபை உறுப்பினர்கள் பயனாளிகளாகக் கலந்து கொண்டிருந்தனர்.

செரி நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றுவரும் குறித்த செயலமர்வில் செரி நிறுவனத்தின் இலங்கைக்கான தேசியப் பணிப்பாளர் வீ.ஈ.தர்சன், செரி நிறுவனத்தின் மாகாணப் பணிப்பாளர் எஸ்.பகீரதன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கிண்ணியா விவசாயிகளுக்கு இலவச உர விநியோகம்





**(சீனக்குடா செய்தியாளர்)**

புதிய அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்ட இலவச உர விநியோகம் நேற்று புதன்கிழமை(18) கிண்ணியா விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆரம்ப கட்டமாக கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மஜீத் நகர் கிராம சேவகர் பிரிவில் குரங்குபாஞ்சான், வெள்ளம்குளம் மற்றும் தீனேரி ஆகிய விவசாய சம்மேளனப் பிரிவு விவசாயிகளுக்கு MOP பசளை வழங்கி வைக்கப்பட்டது.

பெரும்போக விவசாயிகளுக்கு ஓர் ஏக்கருக்கு 10 கிலோ கிராம் வீதமும் சிறுபோக விவசாயிகளுக்கு 12 கிலோ கிராம் வீதமும் வழங்கி வைக்கப்பட்டதென கிண்ணியா கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.கே.அஜித்கான் தெரிவித்தார்.

கிண்ணியா கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 15 விவசாய சம்மேளனப் பிரிவுகள் இருப்பதாகவும் அனைத்து பிரிவு விவசாயிகளுக்கும் கட்டங்கட்டமாக இலவச MOP உரம் வழங்கிவைக்கப்படுமெனவும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

# இந்து சமுத்திரத்தின் அமைதி, ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு வளர்ச்சிக்கு இரு நாடுகளினதும் வகிபாகம் முக்கியம்

## இந்திய அரச விருந்துபசாரத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை







இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமைதி, ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்வதில் நமது இரு நாடுகளின் பங்கு மிகவும் முக்கியமானது. எங்கள் கூட்டாண்மையின் பலம் கூட்டுச் செயற்பாட்டில் தங்கியுள்ளது.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பது, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது அல்லது உலகளவில் அனைத்து குடிமக்களுக்கும் பயனளிக்கும் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவது எதுவாக இருந்தாலும், கூட்டு முயற்சிகள் மூலம் மட்டுமே எல்லைகளைத் தாண்டிய புதிய மற்றும் அதிகரிக்கும் சவால்களை எதிர்கொள்ள முடியும்'' என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கிய அரச விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, அமைச்சர்கள், விசேட விருந்தினர்கள், ஆயுபோவன், வணக்கம், நமஸ்தே, மாலை வணக்கம், ஜனாதிபதி அவர்களே, உங்கள் அன்பான கருத்துக்களை நான் மிகவும் உயர்வாகக் கருதுகிறேன்.

உங்கள் நாட்டில் எனது குழுவுக்கும் எனக்கும் அளிக்கப்பட்ட அன்பான விருந்தோம்பலுக்கு உங்களுக்கும் இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது இந்திய நண்பர்களுக்கு இலங்கை மக்களின் அன்பான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் இராஜதந்திரம் மற்றும் புவியியல் நெருக்கத்துக்கு அப்பாற்பட்டவை. எங்கள் உறவு நாகரீக ரீதியில் பிணைந்துள்ளதோடு, அது பரஸ்பர மரியாதை, ஒத்துழைப்பு மற்றும் கூட்டு செயற்பாடாக வரையறுக்கப்படுகிறது.

இந்து சமுத்திரக் கரையிலிருந்து உப கண்டத்தின் மையப்பகுதி வரை, நமது நாடுகளின் வலுவான உறவுகளில் உள்ளார்ந்த மரபுகள், மதிப்புகள் மற்றும் எதிர்காலத்துக்கான பார்வை ஆகியவற்றின் பொதுவான பாரம்பரியத்தால் நாம் பிணைக்கப்பட்டுள்ளோம். எனவே, எனது முதல் உத்தியோகபூர்வ அரச விஜயத்தை நான் இந்தியாவுக்கு மேற்கொண்டமை ஆச்சரியப்படும் விடயமல்ல.

இந்த பழமையான நட்பை மேலும் வலுப்படுத்த எனது நிர்வாகம் உறுதிபூண்டுள்ளது. பொருளாதார மீட்சி, அபிவிருத்தி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கிய எமது நாட்டின் பயணத்தில், இந்தியா எமக்கு மேலான ஒத்துழைப்பை வழங்கும் நம்பகரமான நண்பராகவும் உறுதியான பங்காளியாகவும் நெருங்கிய அண்டை நாடாகவும் மாறியுள்ளது. தேவைப்படும் சமயங்களில் இலங்கைக்கு இந்தியா அளித்துவரும் ஆதரவையும் தளராத ஒத்துழைப்பையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

இலங்கை ஒரு புதிய சகாப்தத்தின் வாசலில் நிற்கும் வேளையில், அதன் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதும் மக்களிடையேயான தொடர்புகளை மேம்படுத்துவதும் பிராந்திய மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை முன்னேற்றுவதும் மிக முக்கியமானது. எதிர்காலத்தில் மிகப்பெரிய சாத்தியங்கள் உள்ளன.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமைதி, ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்வதில் எமது இரு நாடுகளின் பங்கு மிகவும் முக்கியமானது.

எங்கள் கூட்டாண்மையின் பலம் கூட்டுச் செயற்பாட்டில் தங்கியுள்ளது.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பது, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது அல்லது உலகளவில் அனைத்து குடிமக்களுக்கும் பயனளிக்கும் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவது எதுவாக இருந்தாலும், கூட்டு முயற்சிகள் மூலம் மட்டுமே எல்லைகளைத் தாண்டிய புதிய மற்றும் அதிகரிக்கும் சவால்களை எதிர்கொள்ள முடியும்.

எதிர்கால சந்ததிகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மற்றும் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் உலகின் அபிவிருத்திக்கு 21ஆம் நூற்றாண்டின் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு, உலகளாவிய தெற்கின் ஒரு தலைவராக இந்தியா வுடன் ஆழமான ஒத்துழைப்பை பேண இலங்கை உறுதிபூண்டுள்ளது.

இந்த சந்தர்ப்பம், அமைதி மற்றும் முன்னேற்றத்துக்கான முயற்சியில் எம்மை இணைவதற்கு எம்மை சமீபமாக்கும்.காலத்தினால் அழியாமல் நீடிக்கும், எமது தேசங்கள் இரண்டுக்கும் இடையில் செழுமையடையும் நீண்டகால நட்பின் அனுட்டிப்பாக அமையட்டும் என்றும் நான் பிரார்த்திக்கிறேன்.

இந்திய அரசாங்கமும் மக்களும் எமக்கு வழங்கும் அசைக்க முடியாத ஆதரவு மற்றும் நட்புக்காக எனது கௌரவத்துடன் கூடிய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

எமது ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று எதிர்பார்க்கும் அதேநேரம், நாம் ஒன்றாகச் செல்லும் பயணம் எமது நாடுகளைப் போலவே முழு பிராந்தியத்துக்கும் செழிப்பைக் கொண்டுவரும் என்று நான் நம்புகிறேன்.

# பதில் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்தார் அமெரிக்க தூதரகத்தின் துணைத் தூதுவர்

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பிரதித் தூதுவர் டக்ளஸ் ஈ சொனெக், பதில் பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவை (ஓய்வு) நேற்று முன்தினம் (17) அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

அவருடன் அமெரிக்கத் தூதரகத்தின் உதவி பாதுகாப்பு ஆலோசகர் செத் நெவின்ஸ் மற்றும் அரசியல் அதிகாரி கெவின் பிரைஸ் ஆகியோரும் உடனிருந்தனர்.

அமெரிக்கா தூதுக்குழுவினரை அன்புடன் வரவேற்ற மேஜர் ஜெனரல் ஜயசேகர (ஓய்வு) அவர்களுடன் பரஸ்பர மற்றும் இருதரப்பு நலன்கள் தொடர்பான சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# பாராளுமன்ற உறுப்பினராக நிசாம் காரியப்பர் பதவிப் பிரமாணம்



ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்து வப்படுத்தி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக மொஹமட் நிசாம் காரியப்பர் பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் நேற்று (18) பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு கடந்த நவம்பர் 21ஆம் திகதி இடம்பெற்றதுடன், அன்றைய தினம் புதிய உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்தனர். அதுவரை ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த நான்கு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான பெயர் வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருக்கவில்லை.

இந்தப் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியை கடந்த 12 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இதற்கமைய அந்த நான்கு உறுப்பினர்களில் அர்ஜுன சுஜீவ சேனசிங்க, முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது மற்றும் மனோ கணேசன் ஆகிய மூவர் நேற்று முன்தினம் (17) பதவிப்பிரமாணம் செய்தனர்.

# அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வா



அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது. இதன்போது, நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளுக்கமையவும் 2024 டிசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவில் பணியாற்றுவதற்கான ஏனைய உறுப்பினர்களின் பெயர்களையும் சபாநாயகர் நேற்று (18) சபையில் அறிவித்தார்.

இதற்கமைய, கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும, ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்நாயக்க, திலிண சமரகோன், சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# துப்பாக்கியுடன் இருவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

சட்டவிரோதமான முறையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றை வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவரை மொறகொள்ளாகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (17) மொறகொள்ளாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கிரியாகந்த பகுதியிலுள்ள வீடொன்றில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேகந பர்கள் இருவரை கைதுசெய்துள்ளதுடன், துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 21, 30 வயதுடைய மடகல்ல மற்றும் மொறகொள்ளாகம பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# எம்.பிக்களின் தொழில்சார் அடைமொழிகளை நீக்குக

## திலித் ஜயவீர எம்.பி. கோரிக்கை



''சபைக்குள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களின் முன்னாள் இருக்கும் கலாநிதி, பேராசிரியர், வைத்தியர் போன்ற தொழில்சார் அடைமொழிகளின் பயன்பாட்டை நீக்க வேண்டும்'' என சர்வசன அதிகாரம் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற புதிய சபாநாயகர் நியமனத்தின் பின்னர், சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''புதிய சபாநாயகருக்கு வாழ்த்துகளை தெரிவிக்கும் அதேவேளை, புதிய சபாநாயகரால் சுயாதீனமாக செயற்பட்டு சபையின் கௌரவத்தை பாதுகாக்கக் கூடியதாக இருக்குமென நம்புகிறேன். அதேபோல் நீண்ட காலம் இருந்து வந்த பாராளுமன்ற சம்பிரதாயங்களை பாதுகாக்க கூடியதாக இருக்குமெனவும் நம்புகிறேன்.

இருந்தபோதும், இந்த பிரச்சினை தோற்றம் பெற்றவிதம், பின்னணி என்பவற்றை கருத்திற்கொண்டும் ஏனைய விடயங்களையும் கருத்திற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களின் முன்னால் இருக்கும் கலாநிதி, பேராசிரியர், வைத்தியர் போன்ற தொழில்சார் அடைமொழிகளை சபை நடவடிக்கைகளில் இருந்து நீக்க வேண்டும்.

அவ்வாறு நீக்குவது எமது அரசியல் செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்கும். இது சமூக வேறுபாட்டை காட்டுகிறது. பல்வேறு தொழிற்றுறை சார்ந்தவர்கள் இந்த சபையில் இருக்கிறார்கள்.

பேராசிரியர் என்பவர் பல்கலைக்கழகங்களுக்கு உரித்தானவர். வைத்தியர் வைத்தியசாலைக்குரியவர். எனவே, பாராளுமன்றத்தில் இருக்கும் ஒவ்வொருவரையும் முகவரிப்படுத்தும்போது பெயர்களுக்கு முன்னால் இருக்கும் தொழில்சார் அடைமொழிகளை நீக்குவது ஏற்புடையதாக இருக்கும் என்றார்.

# இலங்கைக்கு கடத்துவதற்காக மண்டபம் அருகே பதுக்கி வைக்கப்பட்டிருந்த கடல் அட்டைகள் மீட்பு



ஜோசப் நயன்

இலங்கைக்கு கடல் வழியாக கடத்துவதற்காக இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்த வேதாளை தெற்கு தெருவில் உள்ள வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்திய மதிப்பில் 50 இலட்சம் ரூபா பெறுமதியான 450 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் நேற்று முன்தினம் (17) அதிகாலை மாவட்ட காவல்துறை தனிப்பிரிவு பொலிஸார் கைப்பற்றி அவற்றை மண்டபம் வனத்துறை அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், மண்டபம் வேதாளை, மரைக்காயர் பட்டினம், களிமண்குண்டு, குந்துகால் உள்ளிட்ட கடல் பகுதி இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடல் அட்டை, சமையல் மஞ்சள், பீடி இலை பண்டல்கள், கஞ்சா, மெத்தபெட்டன் உள்ளிட்ட பொருட்கள் கடல் வழியாக படகில் கடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (17)அதிகாலை இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தனிப்பிரிவு பொலிஸாருக்கு மண்டபம் அடுத்த வேதாளை தெற்கு தெருவிலுள்ள வீட்டில் இலங்கைக்கு கடல் வழியாக கடத்துவதற்காக தடைசெய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தனிப்பிரிவு பொலிஸார் குறித்த வீட்டை சுற்றிவளைத்தனர்.

ஆனால் வீட்டில் யாரும் இல்லாத நிலையில் வீட்டின் பின்புறம் சாக்கு மூடைகளில் பதப்படுத்தப்பட்ட சுமார் 450 கிலோ கடல் அட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, கடல் அட்டைகளை பறிமுதல் செய்த தனிப்பிரிவு பொலிஸார் வீட்டின் உரிமையாளர் மீது வழக்குப் பதிவுசெய்து அவரைத் தேடி வருகின்றனர்.

மேலும் பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகளை மண்டபம் வனத்துறை அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகளின் இந்தியப் பெறுமதி 50 இலட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.




# ஜோர்ஜியா நோக்கி நகரத் தொடங்கிய உலகின் பழைமையான - பெரிய பனிப்பாறை!

## கப்பல் போக்குவரத்து சீர்குலையும் அபாயம்

1986இல் அண்டார்டிக்காவிலிருந்து பிரிந்த உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான A23a மீண்டும் நகரத் தொடங்கியுள்ளதாக ஆய்வாளர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். சுமார் ஒரு ட்ரில்லியன் எடை கொண்ட இந்தப் பனிப்பாறை, லண்டன் நகரத்தை விட 2 மடங்கு பெரியது. இது பல மாதங்களாக நகராமல் ஒரே இடத்திலிருந்த நிலையில், தற்போது தெற்கு ஜோர்ஜியா நோக்கி நகர்ந்து செல்கிறது.

ஏறக்குறைய 4,000 சதுர கி.மீ. (1,500 சதுர மைல்கள்), A23a எனப்படும் அண்டார்டிக் பனிப்பாறை நியூயோர்க் நகரத்தை விட மூன்று மடங்கு பெரியது. சமீபத்திய செயற்கைக்கோள் படங்கள், ஏறக்குறைய ஒரு டிரில்லியன் மெட்ரிக் தொன் எடையுள்ள பாறை இப்போது அண்டார்டிக் தீபகற்பத்தின் வடக்கு முனையைக் கடந்து, பலத்த காற்று மற்றும் நீரோட்டங்களின் உதவியால் விரைவாக நகர்கின்றது.

இந்தளவு பனிப்பாறையை நகர்த்தும்போது பார்ப்பது அரிது என்று பிரிட்டிஷ் அண்டார்டிக் ஆய்வு பனிப்பாறை நிபுணர் தெரிவித்துள்ளார். அது நீராவி பெறுவதால் மகத்தான பாறை அண்டார்டிக் சர்க்கம்போலார் மின்னோட்டத்தில் செலுத்தப்படும். இது 'பனிப்பாறை சந்து' என்று அழைக்கப்படும் ஒரு பாதையில் தெற்குப் பெருங்கடலை நோக்கிச் செல்லும்.

2020ஆம் ஆண்டில் மற்றொரு மாபெரும் பனிப்பாறை, A68, தெற்கு ஜோர்ஜியாவுடன் மோதி, கடலின் அடிவாரத்திலுள்ள கடல்வாழ் உயிரினங்களை நசுக்கி உணவு அணுகலைத் துண்டித்துவிடும் என்ற அச்சத்தைத் தூண்டியது. பனிப்பாறை சிறிய துண்டுகளாக உடைந்தபோது அத்தகைய பேரழிவு இறுதியில் தவிர்க்கப்பட்டது. ஆனால், "இந்த அளவிலான ஒரு பனிப்பாறை தெற்குப் பெருங்கடலில் நீண்ட காலம் உயிர்வாழும் ஆற்றலைக் கொண்டுள்ளது. அது மிகவும் வெப்பமாக இருந்தாலும், அது வடக்கே தென்னாபிரிக்காவை நோக்கிச் செல்லக்கூடும். அங்கு அது கப்பல் போக்குவரத்தைச் சீர்குலைக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

# புற்றுநோய் தடுப்பூசியை கண்டுபிடித்தது ரஷ்யா

## நோயாளிகளுக்கு 2025 முதல் இலவசமாக கிடைக்குமென அறிவிப்பு




''புற்றுநோய் தடுப்பூசியை உருவாக்கியுள்ளோம். 2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நோயாளிகளுக்கு இலவசமாகக் கிடைக்கும்'' - என ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சகம் நேற்று (18) அறிவித்துள்ளது.

புற்றுநோய்க்கு தடுப்பூசி கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் உலகின் பல்வேறு நாடுகளும் ஈடுபட்டுள்ளன. சில தனியார் மருத்துவ நிறுவனங்கள் மெலனோமா எனப்படும் உயிர் பறிக்கும் தோல் புற்றுநோய்க்கான தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் பாதிக் கட்டத்தைத் தாண்டியுள்ளன. அந்த வகையில், புற்றுநோய்த் தடுப்பூசிகளை உருவாக்கும் பணிகளில் ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் தீவிரமாகக் களத்தில் இறங்கினர்.

அண்மையில் ''ரஷ்ய விஞ்ஞானிகள் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசியை உருவாக்கும் முயற்சியில் இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும் விரைவில் நோயாளிகளின் பயன்பாட்டுக்கு கிடைக்கும்'' - எனவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உறுதியளித்திருந்தார்.


இந்நிலையில், நேற்று (18) ''புற்றுநோய்த் தடுப்பூசியை உருவாக்கியுள்ளோம். 2025ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நோயாளிகளுக்கு இலவசமாகக் கிடைக்கும்''- என ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

முக்கியமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க மருந்துகள் பயன்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் கதிரியக்க மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் பொது இயக்குநர் ஆண்ட்ரே கப்ரின், ''புற்றுநோய்க்கு எதிராக சொந்தமாக என்.ஆர்.என்.ஏ. தடுப்பூசியை உருவாக்கியுள்ளோம். இது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்'' - எனத் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் புற்றுநோயால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்லும் நிலையில், தற்போது புற்றுநோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# மொசாம்பிக்கை சூறையாடிய சூறாவளி; 34 பேர் பலி



மொசாம்பிக்கின் பல பகுதிகளை 'சிடோ' சூறாவளி கடுமையாகத் தாக்கியதில் 34 பேர் உயிரிழந்துள்ளதுடன் 319 பேர் காயமடைந்துள்ளனர். அத்தோடு, சூறாவளியால் 25 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

சூறாவளியால் மணிக்கு 160 மைல்கள் வேகத்தில் பலத்த காற்று வீசியதில் மொசாம்பிக்கின் நியாஸ்சா, கபோ மற்றும் டெல்கடோ உள்ளிட்ட 3 மாகாணங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளன. 'சிடோ' சூறாவளி நேற்றுமுன்தினம் சிம்பாப்வே அருகே வலுவிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



சிரியா தலைநகர் டமஸ்கஸுக்கு வெளியே சுமார் 1,00,000 பேரின் எச்சங்களுடன் கூடிய பாரிய புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிரியாவிலிருந்து தப்பியோடி ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ள ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் ஆட்சியின்போது கொல்லப்பட்ட சுமார் 1,00,000 பேரின் உடற்பாகங்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 500 பில். டொலர்களை எட்டிய எலான் மஸ்க்!



ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனரும் டெஸ்லாவின் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க், ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, உலக வரலாற்றில் 500 பில்லியன் டொலர் நிகர சொத்து மதிப்பை எட்டிய முதல் நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

கடந்த 10ஆம் திகதி 400 பில்லியன் டொலர்களை எட்டிய எலான் மஸ்க், அடுத்த ஒரு வாரத்தில் 100 பில்லியன் டொலர்கள் சம்பாதித்து அனைவரையும் வாயடைக்க வைத்துள்ளார்.

மின்சார வாகனங்கள் மற்றும் சோலார் பேட்டரிகளை விற்பனை செய்யும் உலகின் மிகவும் மதிப்புமிக்க கார் தயாரிப்பாளரான டெஸ்லாவின் தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க், நாசாவில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள ரொக்கெட் உற்பத்தியாளரான ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தையும் வழிநடத்துகிறார்.

சமூக ஊடக தளமான டுவிட்டர்(எக்ஸ்), நியூரோலிங்க், எக்ஸ் ஏஐ மற்றும் போரிங் கம்பெனி போன்ற பிற முக்கிய நிறுவனங்களுக்கும் எலான் மஸ்க் தலைமை வகித்து வருகிறார்.

எலான் மஸ்க் தற்போது உலகின் மிகப்பெரிய பணக்காரராகவுள்ளார். அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ் இரண்டாவது இடத்திலும், முகநூல் நிறுவனர் மார்க் ஷுக்கர்பெர்க் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

# வனுவாட்டு நிலநடுக்கத்தில் சிக்கி 14 பேர் பலி; 200 பேர் படுகாயம்



வனுவாட்டுவில் நேற்றுமுன்தினம் (17) ஏற்பட்ட 7.4 ரிச்டர் நிலநடுக்கத்தால் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன், 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

நிலநடுக்கத்தின்போது சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியுள்ள நிலையில் அவர்களை மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு அருகே தெற்கு பசுபிக் கடலில் அமைந்துள்ள தீவு நாடு வனுவாட்டு. இந்தத் தீவில்3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொங்கோவில் படகு கவிழ்ந்து 25 பேர் உயிரிழப்பு; பலர் மாயம்



கொங்கோவில் படகு கவிழ்ந்த விபத்தில் குழந்தைகள் உட்பட 25 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொங்கோவின் இனாங்கோ நகரத்தில் அமைந்துள்ள பெமி ஆற்றில் 100க்கும் மேற்பட்டோரை ஏற்றிச்சென்ற படகொன்று பாரம் தாங்காமல் ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. தகவலறிந்து சம்பவப் பகுதிக்குச் சென்ற மீட்புக் குழுவினர் நீரில் தத்தளித்தவர்களைக் காப்பாற்றி கரைக்கு அனுப்பி வைத்தனர். தீவிர தேடுதல் வேட்டையில் 25 சடலங்களைக் கைப்பற்றினர்.

இதேவேளை, படகில் பயணித்தவர்களில் ஏராளமானோர் காணாமல் போயுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

# சுனிதா வில்லியம்ஸை மீட்பதில் மீண்டும் தாமதம்!



சர்வதேச விண்வெளி நிலையத்தில் மாதக்கணக்கில் சிக்கியுள்ள வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் உட்பட இரு அமெரிக்க விண்வெளி வீரர்களை மீட்கும் பணி மீண்டும் தாமதமாகியுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா சார்பில் விண்வெளி வீரர்களான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோர் ஆகிய இருவரும் கடந்த ஜூன் மாதம் போயிங்கின் ஸ்டார்லைனர் விண்கலத்தில் விண்வெளியிலுள்ள சர்வதேச விண்வெளி மையத்துக்கு பணி நிமித்தமாக எட்டு நாட்கள் பயணமாகச் சென்றனர்.

ஆனால், அந்த விண்கலத்தின் இயந்திரக் கோளாறு காரணமாக அவர்கள் திரும்பி வருவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து அவர்கள் இருவரும் இல்லாமல் விண்கலத்தை மட்டும் திரும்ப வரவழைக்க நாசா முடிவு செய்தது.

இந்நிலையில், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோர் இருவரையும் மீட்டு பூமிக்கு கொண்டு வர எலன் மஸ்கின் ஸ்பெஸ் எக்ஸ் நிறுவனம் சார்பில் 'க்ரு-9' எனும் இரண்டு விண்வெளி வீரர்களுடன் கூடிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இந்தக் குழு கடந்த செப்டெம்பர் மாதம் இரண்டு காலி இருக்கைகளுடன் டிராகன் விண்கலத்தில் அந்த விண்வெளி மையத்தை அடைந்தது. இந்த நால்வரும் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் பூமிக்குத் திரும்புவதாக இருந்தனர்.

அவர்கள் அப்படித் திரும்ப வேண்டுமென்றால், சர்வதேச விண்வெளி மையத்தில் அவர்கள் பார்க்கும் பணியை வேறொரு குழு (க்ரூ-10) தொடர வேண்டும்.

இந்நிலையில், அந்தக் குழுவின் (க்ரூ-10) விண்வெளிப் பயணம் அடுத்தாண்டு மார்ச் மாதம் வரையில் சாத்தியமில்லையென நாசா நேற்றுமுன்தினம் (17) தெரிவித்தது. இதனால், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோரின் 8 நாட்கள் பயணம் 9 மாதத்துக்கும் மேலாக நீடிக்கவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய அணு ஆயுதப்படைத் தலைவர் கொலை; உக்ரைன் உளவுத்துறையைச் சேர்ந்த நபர் கைது



ரஷ்யாவின் அணு ஆயுதப்படைகளின் தலைவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொஸ்கோவில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் நேற்றுமுன்தினம் (17) ரஷ்யாவின் அணு, உயிரியல் மற்றும் இரசாயனப் பாதுகாப்புப் படைகளின் தலைவரான லெப்டினண்ட் ஜெனரல் இகோர் கிரில்லோவ் கொல்லப்பட்டதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்தது.

இந்நிலையில், இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ரஷ்ய உளவுத்துறைத் தகவல் தெரிவித்துள்ளது. குறித்த நபரின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்படவில்லை. இருப்பினும், 29 வயதான குறித்த நபர், உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்தவரென்றும் உக்ரைன் உளவுத்துறைக்காக வேலை செய்து வந்ததாக வாக்குமூலம் அளித்துள்ளாரென்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது. தொடர்ந்து கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் இவ்வாண்டில் இதுவரை 349 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவு




அமெரிக்காவில் பாடசாலையொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஐந்து பேர் காயமடைந்தனர். அந்த வகையில், அமெரிக்காவில் இந்தாண்டு மட்டும் 349 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் விஸ்கான்சின் அடுத்த மாடிசன் பகுதியில் செயற்பட்டுவரும் கிறிஸ்தவ பாடசாலையொன்றில் நேற்றுமுன்தினம் மாணவனொருவன் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் மாணவனொருவன், ஆசிரியரொருவர் மற்றும் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட மாணவன் என மூவர் உயிரிழந்த நிலையில் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

# மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கம்

## பாராளுமன்ற உறுப்பினர் பிரதீப் தெரிவிப்பு



"மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே எமது கட்சியின் நோக்கம்"- என தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (17) சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நான் இரத்தினபுரியில் வாழ்கின்ற சிறிய எண்ணிக்கையிலான மலையக மக்களின் விருப்பத்துக்குரியவனாக மட்டுமன்றி, அங்கு வாழ்கின்ற எமது சகோதர மொழி மக்களின் விருப்பத்துக்குரியவனாகவும் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன்.

எனது தந்தை எமது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின்போது இந்நாட்டில் அடிவர்க்க மக்களுக்காகப் போராடிய ஒரு போராளி. அப்போராளியின் மகனாக பாராளுமன்றத்துக்கு நான் வருகை தந்திருப்பது பெருமையாக நினைக்கின்றேன்.

மலையக மக்களைப் பொறுத்தவரையில் இன்று இலங்கைக்கு வருகைதந்து 201 வருடங்களாகின்றன. எமது மக்களுடைய முக்கிய பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படாதவையாகவே இருக்கின்றன.

உதாரணமாக, எமது மக்களின் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்றவை தீர்க்கப்படாத பிரச்சினைகளாகவே காணப்படுகின்றன. இன்று வீட்டு உரிமைகளை எடுத்துக்கொண்டால் 150 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட லயன் காம்பராக்களிலேயேதான் இன்றும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

நான் நினைக்கிறேன் தேசிய மக்கள் சக்தி மலையக மக்களுடைய பிரச்சினைகளை நன்கு அறிந்த ஒரு கட்சி. அதனடிப்படையில் ஹட்டன் பிரகடனம் மூலமாக எமது மக்களுடைய காணிப் பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வுகளை வழங்கியிருக்கின்றோம். எதிர்வரும் காலங்களில் எமது மக்களுடைய காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முன்னின்று செயற்படுவோம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாக உழைத்தவர்கள் மலையகப் பெருந்தோட்ட மக்கள்.

1950, 1960, 1970 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் பாதைகள் நிர்மாணம், போக்குவரத்து, துறைமுகத் தொழில், சுகாதாரம் போன்ற வசதிகளுக்குத் தேயிலை, இறப்பர் போன்றன மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தையே மானியங்களாக வழங்கியிருந்தோம்.

அத்தகைய உழைப்பை நல்கிய மலையக மக்கள் சுமார் 52 வீதமானவர்கள் இன்னமும் வறுமைக்கோட்டின் கீழேயே வாழ்கின்றமை வேதனைக்குரியதாகும்.

1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி 1997 இலும் 1983 இலும் திட்டமிட்டு வன்செயல்களை நடத்தியது. ஆனால், ஜனநாயக ரீதியில் செயற்பட்டுவந்த மக்கள் விடுதலை முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கம் அதனை முறியடித்தது. அன்று கொடுமைகளுக்கு எதிராகப் போராடிய எத்தனையோ போராளிகளின் தியாகத்தால்தான் இன்றைய ஆட்சிக்குள் நாம் வருகைதந்திருக்கின்றோம்.

மலையக மக்களின் முக்கிய பொருளாதாரமாகக் காணப்படுகின்ற பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பாரிய பிரச்சினைகளுக்குள்ளாகியுள்ளது. ஒரு காலத்திலே மொத்த தேசிய உற்பத்தியில் 23 சதவீதமாகக் காணப்பட்ட பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியில் தற்போது காணப்படுவது மிகவும் வேதனைக்குரியதாகும். இன்னும் 52 சதவீதமான மலையக மக்கள் வறுமைக்கோட்டின் கீழேயே வாழ்கின்ற நிலை காணப்படுகின்றது.

இன்று அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நாட்சம்பளம் 1,350 ரூபா மாத்திரமே. அவர்களுக்கான உரிய சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை.

வேலையில்லாப் பிரச்சினை, அதிகரித்த நோயாளிகள், சத்துள்ள உணவின்மை இவற்றுக்கு மத்தியில் நாளொன்றுக்குக் கிடைக்கும் சம்பளத்தை வைத்துக்கொண்டு எவ்வாறு எமது மக்கள் ஒருவேளை உணவை போஷாக்கான உணவாக உட்கொள்வர் என்பது கேள்விக்குறியே.

மறுசீரமைப்பு மூலமாக கடனுக்கான வட்டி வீதங்கள் கிரமமாகக் குறைக்கப்பட்டுள்ளன. சிறு வியாபாரிகள், வீடுகட்டுவதற்கான இக்கடன் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த ஐ.எம்.எவ். மறுசீரமைப்பு மூலமாக சமூகநலத் திட்டங்களைக் கட்டுப்படுத்தவில்லை. இது மலையக மக்களுக்கு கிடைத்த ஒரு சிறிய ஆறுதலாகவே நான் நினைக்கின்றேன்.

எரிபொருள் குறைப்பும் ஊழல் மோசடி ஒழிப்பும் மக்களுடைய தேவைகளை நியாயமான முறையில் மேற்கொள்வதற்காக வழிசமைத்துள்ளன.

மலையகத்திலே ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் முகவரியற்று வாழ்கின்றனர். அந்த மக்களிலே நானும் ஒருவன்.

புதிய மாற்றத்தினூடாக தேசிய மக்கள் சக்தி மலையக மக்களையும் மனிதனாக மதித்து அந்த மக்களின் வாழ்வியலை மேம்படுத்தவும் நிம்மதியாக வாழ்வதற்குமேற்ற வகையில் செயற்படுவோம் என்ற நம்பிக்கையில் நாம் பயணித்துக்கொண்டிருக்கின்றோம்" - எனத் தெரிவித்தார்.



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1944ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் மஜ்லிஸ் தனது 80ஆவது ஆண்டு விழாவை பொறியியற் பீட ஈ.ஓ.ஈ. பெரேரா மண்டபத்தில் கொண்டாடியது. இவ்விழாவில் இச்சங்கத்தின் பொருளாளர் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம் எஸ்.எம். ராசிக் உரையாற்றுவதையும் பல் மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் பண்ஹெக பரிசில்களை வழங்குவதையும் குருந்துகொல்ல மத்திய கல்லூரி மாணவர்களின் கோலாட்ட நடனத்தையும் கலந்துகொண்டவர்களுள் ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள்- பேராதனை நிருபர், எம்.ஏ.அமீனுல்லா)

# பூங்காவில் ஆக்கிரமிப்புத் தாவரம் அகற்றல்



(மஸ்கெலியா நிருபர்)

உலக மலையக தினத்தை முன்னிட்டு அண்மையில் ஹோர்டொன்தன்ன தேசிய பூங்காவில் அதிகளவில் பரவி வரும் Eupatorium எனும் ஆக்கிரமிப்புத் தாவரத்தை அகற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறியதாவது,

மலையகத்தில் காலாகாலமாக இடம்பெற்று வரும் மனித செயற்பாடுகளினால் மலையக சுற்றுச்சூழலில் பல பிரச்சினைகள் உருவாகி வருகின்றன.

முதற்கட்டமாக, Hortonthanna பூங்காவில் மிக வேகமாகப் பரவிவரும் Eupatorium எனப்படும் ஆக்கிரமிப்பு ஆலையை அகற்றுவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், அது சுற்றுச்சூழலுக்கு பாரிய அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளதென ஹோர்டொன் தன்னா பூங்காவைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

பேராசிரியர் சிறில் விஜேசுந்தர, சூழலியலாளர் ராஜிக கமகே, வன ஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் மஞ்சுளா ஆகியோர் இப்பணியை முன்னெடுப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை ஒருங்கிணைத்து வழங்கினர்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஹோர்டோன்தன்னா பூங்காவின் பராமரிப்பாளர் சிசிர ரத்நாயக்க, அதன் அதிகாரிகள், DHL KEELS ஊழியர்கள் மற்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் குழுவினர் கலந்து கொண்டனர்.

# சிவனொளிபாதமலை யாத்திரைக்கு போதைப்பொருளுடன் சென்ற இளைஞன் கைது!

(மஸ்கெலியா நிருபர்)

ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் சிவனொளிபாத மலை யாத்திரைக்குச் சென்றிருந்த இளைஞர் ஒருவர் ஹட்டன் ரயில் நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சாரதிகள் - நடத்துநர்கள் பற்றாக்குறை; 07 டிப்போக்களின் 25 சேவைகள் இடைநித்தம்

(எம்.ஏ.அமீனுல்லா )

சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பற்றாக்குறை காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் கண்டி பிரதேசத்துக்குட்பட்ட 07 டிப்போக்களில் சுமார் 25 பஸ்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் கண்டி பிராந்திய முகாமையாளர் பிரசன்ன தெல்லங்க தெரிவித்துள்ளார் .

கண்டி வடக்கு, கண்டி தெற்கு, வத்தேகம, யட்டிநுவர, தெல்தெனிய, மாத்தளை மற்றும் உடுதும்பர ஆகிய டிப்போக்களில் தற்போது சுமார் 75 சாரதி வெற்றிடங்களும் 33 நடத்துநர் வெற்றிடங்களும் காணப்படுவதாகவும் அவர் கூறினார். கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிலேயே அவர் இந்தத் தகவல்களை வெளிப்படுத்தினார்.

கடந்த அரசாங்கத்தின் போது இலங்கை போக்குவரத்து சபை கண்டி மாவட்டத்துக்கு 47 புதிய பஸ்கள் வழங்கப்பட்டு ஒரு பஸ்ஸுக்கு மாதாந்த குத்தகைத் தொகையாக 1,65,000 ரூபா செலுத்தப்படவேண்டுமெனவும் இந்தப் பணம் அனைத்தும் ஏழு டிப்போக்களின் வருமானத்திலிருந்து வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறினார்.

இலாபமீட்டாத டிப்போக்கள் வழியாக பஸ்கள் இயக்கப்படுவதாகவும் நஷ்டத்தை இலாபகரமான டிப்போக்கள் மூலமே ஈடுசெய்ய வேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார்.

# அரச அலுவலர்கள் சிலரிடம் மக்களை பழிவாங்கும் சிந்தனை

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு!

(பு.கஜிந்தன்)



''அரச அலுவலர்களிடம் அதுவும் புதிதாகப் பதவியேற்ற நிர்வாக அலுவலர்கள் சிலரிடம் மக்களைப் பழிவாங்கும் - அலைக்கழிக்கும் சிந்தனை இருப்பதை நான் அவதானிக்கின்றேன். இந்த எண்ணங்களை மாற்றுங்கள். போரால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களை - எங்கள் மாகாணத்தை நாங்கள் எல்லோரும் இணைந்துதான் உயர்த்தவேண்டும்''- என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும் வடந்தை நூல் வெளியீடும் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை (17) இடம்பெற்றது. மன்னார் பாலத்திலிருந்து அதிதிகள் கலை ஆற்றுகைகளுடன் பேரணியாக விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பாரம்பரிய பொருட்கள் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில்,

''தமிழர்களின் மிக முக்கியமான பண்பாடு விருந்தோம்பல். அதை நாம் இன்று மறந்து செல்கின்றோம். அவ்வாறு நாங்கள் மறந்து செல்பவற்றை நினைவூட்டத்தான் இவ்வாறான விழாக்கள் நடத்தப்படுகின்றன. இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவுடன் இணைந்ததாக நடத்தப்பட்ட கண்காட்சி வெகுவாகப் பாராட்டுதற்குரியது. அந்த ஆக்கங்களை இளையோரே செய்திருக்கின்றனர். அவர்களுக்கு சிறப்பான எதிர்காலம் இருக்கின்றது.

எமது சுற்றாடலை எவ்வாறு பாதுகாப்பதென்பது தொடர்பில் சிறுவயதிலிருந்தே பழக்கவேண்டியிருக்கின்றது. அதற்காக ஒரு பாடவேளையை ஒதுக்குவது தொடர்பில் அமைச்சின் செயலருடன் கலந்துரையாடவிருக்கின்றேன். அநேகமான படித்தவர்கள் தான் வீதிகளில் குப்பைகளை வீசி எமது மாகாணத்தை அசிங்கமாக்குகின்றனர்.

மாவட்டச் செயலராக கடந்த காலத்தில் நான் இருந்தபோது கூட இவ்வாறு பொதுமக்கள் ஆளுநரைச் சந்திப்பதற்கு வரவில்லை. சின்ன விடயங்களுக்கும் இப்போது ஆளுநர் அலுவலகத்துக்கு வருகின்றார்கள். அந்தப் பொதுமக்கள் தங்களது பிரதேசங்களிலுள்ள அரச திணைக்களங்களில் அந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்று வருகின்றனர். பொதுமக்கள் தினமான நேற்று (நேற்று முன்தினம்) திங்கட்கிழமை (16) இரவு 8 மணியைத் தாண்டியும் பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்திருந்தேன்.


முன்னைய காலத்தில் குறைந்தளவு பணியாளர்களுடன் மக்களுக்குத் திறம்பட சேவைகள் வழங்கப்பட்டன. இப்போது அதிகரித்த ஆளணி மற்றும் கணினி வளங்கள் இருந்தாலும் மக்களுக்கு சிறப்பான சேவைகள் வழங்கப்படவில்லை''- என்று ஆளுநர் வருத்தத்தை வெளியிட்டார்.

மக்கள் தமது பிரதேச அல்லது கீழ்நிலை அலுவலர்களின் ஊடாக ஒரு சேவையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென மேல்நிலை அலுவலர்கள் அல்லது திணைக்களத் தலைவர்களிடம் சென்றால், அந்த மக்களுடன் எரிந்து விழுந்து அவ்வாறு ஏன் சென்றீர்கள் எனக் கேட்டு, அந்தத் தேவையை நிறைவேற்றிக்கொடுக்க மறுக்கின்ற கீழ்நிலை அலுவலர்கள் இப்போது இருக்கின்றார்கள் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், இவர்களால் எப்படி இப்படிச் சொல்ல முடிகின்றது என்ற கேள்வியை எழுப்பியதுடன் இவர்களின் மனநிலையை நினைத்துக் கவலையடைவதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், நாட்டுக்கூத்து கலைஞர் கலாபூஷணம் செ.மாசிலாமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இளங்கலைஞர் விருதை 10 பேரும் கலைக்குரிசில் விருதை 13 பேரும் சிறந்த நூல்களுக்கான விருதை 14 பேரும் பெற்றுக்கொண்டனர்.

# யாழ். ஏ-9 வீதியில் வாகன விபத்து - ஐவர் படுகாயம்!



(பு.கஜிந்தன்)


கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிச் சென்ற அதி சொகுசு பஸ் ஒன்று, உழவு இயந்திரத்துடன் மோதியதில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் (18) காலை ஏ-9 வீதி, மிருசுவில் பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்தது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 3 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# தூக்கில் தொங்கியவாறு இளைஞனின் சடலம் மீட்பு

## மரணத்தில் சந்தேகமென உறவினர்கள் தெரிவிப்பு!



(பு.கஜிந்தன்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது.

செட்டி வீதி, இணுவில் மேற்கு இணுவில் பகுதியைச் சேர்ந்த அமுதலிங்கம் நிவேதன் (வயது 31) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த இளைஞன் வீட்டின் முன்புறமுள்ள காணியில் நேற்று முன்தினம் (17) இரவு இருந்துள்ளார். இதன்போது இரவு உணவுக்காக அவரது தாயார் குறித்த இளைஞனை அழைத்துள்ளார். அவர் வருவதாகக் கூறினார். இருப்பினும், வீட்டுக்குச் செல்லவில்லை. பின்னர் உறவினர்கள் தொலைபேசி மூலம் அழைப்பு மேற்கொண்டவேளை அவரது கைப்பேசி இயங்காது காணப்பட்டது.

இந்நிலையில், அவர் நேற்று வீட்டின் முன்னாலுள்ள காணியிலுள்ள மரமொன்றில் தூக்கில் தொங்கியவாறு சடலமாகக் காணப்பட்டார். அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸார் நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசாங்க அதிபர் - தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல்



(பு.கஜிந்தன்)

தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று முன்தினம் (17) யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் காலை 10.30 மணிக்கு கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர்,

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமையவும் மாவட்ட செயலகத்தில் 2024.12.11ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமையவும் தரம் 9 மற்றும் தரம் 9 க்கு உட்பட்ட வகுப்புகளுக்கான தனியார் கல்வி நிலைய மற்றும் குழு வகுப்புச் செயற்பாடுகளை மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்காகவும் அறநெறிசார் செயற்பாடுகளுக்காகவும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழுநேரமாகவும் நிறுத்துவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானமானது மாவட்டத்தின் சமூக நலனை அடிப்படையாகக்கொண்டே எடுக்கப்பட்டதாகும். பிள்ளைகளின் நலன்கருதி தனியார் கல்வி நிறுவனங்களின் அமைவிடங்கள், வகுப்பறைக் கட்டமைப்பு மற்றும் வசதிகள் தொடர்பிலும் நிறுவன உரிமையாளர்கள் கூடுதலான கவனம் செலுத்தவேண்டும் – என்று கேட்டுக்கொண்டார்.

மேற்படி கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

01.தரம் 9 மற்றும் தரம் 9 க்கு உட்பட்ட வகுப்புகளுக்கான தனியார் கல்விச் செயற்பாடுகள் மற்றும் குழு வகுப்புகளை வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழுநேரமாகவும் நிறுத்துவதெனவும் பிரதேச செயலாளர்கள் தமது உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்படி விடயத்தைக் கண்காணித்து அறிக்கையிடுதல் வேண்டுமெனவும்

02.தனியார் கல்வி நிலைய வாசலில் பெற்றோர்கள் காத்திருப்பதனால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் / நிர்வாகிகள் இதற்கான சரியான பொறிமுறையை மேற்கொண்டு போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் இந்தப் பொறிமுறையை தாமாக நடைமுறைப்படுத்தத் தவறும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் பொலிஸாரின் உதவி பெற்றுக்கொள்ளப்படுமெனவும்,

03.பிரதேச செயலாளர்கள் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் தமது பிரதேசங்களில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புகள் தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், யாழ். மாவட்ட தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் நடைபாதை அமைப்பு!



(சிவகுமார் திவியா)

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியின் முகப்பு பகுதியில் நடைபாதை அமைக்கும் பணி நகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த பாதையில் இருபக்கமும் வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு சுகாதாரமற்ற வகையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் அந்தப் பாதையில் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்ட வவுனியா நகரசபை, அந்த வீதியின் முகப்பு பகுதியில் நடைபாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் (18) அங்கு மரக்கறி விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் பொலிஸாரால் அகற்றப்பட்டிருந்தனர்.

# விளையாட்டுத் துளிகள்

## மழையால் மண்ணான முதல் ஒருநாள் ஆட்டம்

சுற்றுலா ஆப்கானிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. முதலில் நடந்த ரி 20 தொடரை 2-1 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி ஹராரேவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மழை காரணமாக இந்தப் போட்டி 28 ஓவராகக் குறைக்கப்பட்டது.

சிம்பாப்வே அணி முதலில் பேட்டிங் செய்து 9.4 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 44 ரன்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. மழை தொடர்ந்து பெய்ததால் ஆட்டம் இரத்துசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 2வது போட்டி இன்று நடைபெறுகிறது.




★ ஆப்கான் அணியுடனான 3ஆவது ரி20 ஆட்டத்தில் சிம்பாப்வே அணி குறித்த நேரத்துக்குள் பந்துவீசி முடிக்க தவறியதன் காரணமாக அதன்படி சிம்பாப்வே அணி வீரர்களுக்கு போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. நடுவர்களின் குற்றச்சாட்டை சிம்பாப்வே கேப்டன் சிக்கந்தர் ராசா ஏற்றுக்கொண்டதாகவும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.



★ அசாம் மாநிலம் குவாஹாட்டியில் நடைபெற்ற குவாஹாட்டி மாஸ்டர்ஸ் சுப்பர் 100 பெட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தனிஷா கிரஸ்டோ, அஸ்வினி பொன்னப்பா ஜோடி சம்பியன் பட்டத்தை தக்கவைத்தது. மகளிர் இரட்டையர் இறுதிப் போட்டியில் தனிஷா, அஸ்வினி ஜோடி 21-18, 21-12 என்ற செட் கணக்கில் சீனாவின் லிஹூவா ஜோவ், வாங் ஜி மெங் ஜோடியை வீழ்த்தி பட்டத்தை வென்றது.

★ சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் உலக சம்பியன் பட்டம் வென்ற தமிழக இளம் வீரர் குகேஷுக்கு தங்கப் பதக்கம், கிண்ணத்துடன் ரூ.11 கோடி பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது. அவரை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழக அரசு சார்பில் ரூ.5 கோடி பரிசு வழங்கப்படுவதாக தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



## மழையின் குறுக்கீட்டால் சமநிலையில் நிறைவடைந்த மூன்றாவது டெஸ்ட்

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் 3ஆவது போட்டியின் பெரும் பகுதி மழையால் மண்ணான நிலையில் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவுக்கு வந்தது.

பிரிஸ்பேனில் உள்ள கப்பா ஸ்டேடியத்தில் நேற்றைய இறுதி நாள் ஆட்டமும் மழை காரணமாக பாதிப்படைந்தது. கடந்த சனிக்கிழமை ஆரம்பமான குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 117.1 ஓவர்களில் 445 ரன்கள் குவித்து சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக டிராவிஸ் ஹெட் 151 ரன்களும் ஸ்டீவ் ஸ்மித் 101 ரன்களும் எடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 252 ரன்கள் எடுத்திருந்தது. நேற்று ஐந்தாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 260 ரன்னுக்கு சகல விக்கெட்களை இழந்தது. இதையடுத்து 185 ரன்கள் முன்னிலையில் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா 7 விக்கெட்டை இழந்து 89 ரன்கள் எடுத்திருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அதன் படி இந்தியாவுக்கு 275 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்திய அணி இலக்கை நோக்கி ஆடிய நிலையில் மைதானத்தில் மீண்டும் மழை குறுக்கிட்டதால் இறுதியில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுக்கு வந்தது.

தொடரின் முதல் போட்டியில் இந்திய அணியும் இரண்டாவது போட்டியில் ஆஸி. அணியும் வெற்றிபெற்ற நிலையில் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. நான்காவது டெஸ்ட் போட்டியானது பொக்சிங் டே டெஸ்ட் போட்டியாக எதிர்வரும் 26ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்பமாகிறது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டி அணியை தீர்மானிக்கு ஆட்டங்களாக எஞ்சிய இரு போட்டிகளும் காணப்படுவதால் இரு அணிகளும் வெற்றிபெற கடுமையான போராட்டத்தை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த பாகிஸ்தான்

தென்னாபிரிக்க அணியுடனான முதல் ஒருநாள் போட்டியில் சையிம் அய்யூப்பின் அபார சதத்தின் உதவியுடன் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்களினால் வெற்றியீட்டியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி20 தொடரை 2-0 என தென்னாபிரிக்கா கைப்பற்றியது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி, பார்ல் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 239 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக கிளாசென் 86 ரன்கள் எடுத்தார். 240 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணியில், தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சையிம் அய்யூப் 119 பந்துகளில் 109 ரன்கள் சேர்த்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

அய்யூப்புடன் இணைந்த சல்மான் அகா, தனது நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி 82 ரன்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இறுதியில் பாகிஸ்தான் அணி 49.3 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை அடைந்தது. இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று கேப்டவுணில் நடைபெறுகிறது.



## நியூசிலாந்து வெள்ளைபந்து அணியின் தலைவராக சாண்ட்னர் நியமனம்

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இம்மாத இறுதியில் சொந்த மண்ணில் இலங்கை அணியுடன் ஒருநாள் மற்றும் ரி20 தொடர்களில் விளையாடவுள்ள நிலையில் அவ்வணியின் நிரந்த ஒருநாள் மற்றும் ரி20 அணியின் தலைவராக சகலதுறை வீரர் மிட்செல் சாண்ட்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ரி20 உலகக்கிண்ண தொடரில் நியூசிலாந்து தோல்வி அடைந்ததை அடுத்து அந்த அணியின் தலைவராக செயற்பட்டு வந்த கேன் வில்லியம்சன் அந்த பொறுப்பில் இருந்து விலகினார். அதனை அடுத்து வெள்ளைபந்து அணிக்கு தற்காலிக தலைவராக சாண்ட்னர் செயற்பட்டுவந்தார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி சொந்த மண்ணில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-2 என்ற கணக்கில் இழந்தது. இதையடுத்து நியூசிலாந்து அணி இலங்கைக்கு எதிராக 3 ரி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் நியூசிலாந்தில் நடைபெறுகிறது.

நியூசிலாந்து அணி கடந்த மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வெள்ளைபந்து தொடரில் ஆடிய நிலையில் அந்த அணிக்கு தலைவராக சாண்ட்னர் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.







## விடைபெற்ற சவூதிக்கு வெற்றியை பரிசளித்த நியூசிலாந்து

ஹமில்டனில் நேற்று முன்தினம் நிறைவடைந்த இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து 423 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. தொடரை 2-1 என்று இங்கிலாந்து வென்றாலும் நியூசிலாந்து தொடரை வெற்றியுடன் முடித்தது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இந்த 423 ரன்கள் வெற்றியானது நியூஸிலாந்தின் மிகப் பெரிய வரலாற்று வெற்றியாகும்.

இந்த டெஸ்ட் போட்டியுடன் டிம் சவூதி ஓய்வு பெற்றார். 107 டெஸ்ட் போட்டிகளில் சவூதி 391 விக்கெட்டுகளைக் கைப்பற்றி கிட்டத்தட்ட 16-17 ஆண்டுகாலம் நியூஸிலாந்துக்காக கடுமையாக உழைத்துள்ளார். துடுப்பாட்டத்தில 107 போட்டிகளில் 2245 ரன்களை எடுத்துள்ளார். மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டில் 98 சிக்சர்களுடன் சாதனை நிகழ்த்தியுள்ளார். கடைசி டெஸ்ட்டில் சவூதி 2ஆவது இன்னிங்ஸில் 34 ரன்களுக்கு 2 விக்கெட்டுகள் வீழ்த்தி கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்தார்.




## சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார் அஸ்வின்

பிரிஸ்பேனில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது பார்டர்-கவாஸ்கர் டிராபி டெஸ்ட் முடிவடைந்ததைத் தொடர்ந்து, இந்திய ஆஃப் ஸ்பின்னர் ஆர் அஷ்வின் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று புதன்கிழமை அறிவித்தார். இந்திய கிரிக்கெட் அணியின் முக்கிய சுழற்பந்து வீச்சாளர் , தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின். இந்நிலையில் இவர் இன்று சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். சென்னை டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அபார சதம் அடித்ததன் மூலம் பேசப்பட்டவர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7